

டிசம்பர் 2025



# கொழும்பில் சமூகப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புறப் பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள்

இரோமி பெரேரா | மேக்ஹால் பெரேரா



COLOMBO URBAN LAB

CENTRE FOR A SMART FUTURE

unicef for every child

# அறிமுகம்
## இலங்கையின் பலவாறான நெருக்கடிகளும் நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்பும்

இலங்கையில் 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட பலவாறான நெருக்கடிகளின் காரணமாக இலங்கைக் குடும்பங்கள் முன்னெப்பொழுதும் அனுபவித்திராத அதிர்ச்சிகளுக்கு முகங்கொடுத்தன. பொருளாதாரம் முன்னேற்றமடைந்த காரணத்தினால் சிலர் வாழ்வினைச் சீரமைத்து இக்காலப்பகுதியில் இருந்து மீண்டாலும் அதிர்ச்சியின் தாக்கங்கள் நிலையான வடுக்களை விட்டுச் சென்றுள்ளன என்பதைக் கொழும்பின் உழைக்கும் வர்க்கத்தினைச் சேர்ந்த வறிய சமுதாயங்களின் மத்தியிலும் நகரத்தின் முறைசாராத் துறையின் மத்தியிலும் கொழும்பு ஏர்பன் லேப் (Colombo Urban Lab) தற்போது நடத்தி வரும் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. கற்றல் இழப்பு, சொத்துக்களின் இழப்பு, மோசமடைந்து வரும் போஷாக்கு மற்றும் சுகாதாரம், தனிப்பட்ட தேவைகளுக்குச் செலவிடுவதற்கு நேரம் இல்லாமை அதிகரித்துள்ளமை மற்றும் குறைவடைந்துள்ள வாழ்க்கைத் தரம் என்பவை முதற்கொண்டு – இந்தக் குடும்பங்களும் சமுதாயங்களும், திடமான பொருளாதாரக் குறிகாட்டிகள் நிலவுவதைத் தாண்டியும் நீண்ட வரிசைகள் இல்லாமலிருப்பதைத் தாண்டியும் இந்தப் பலவாறான நெருக்கடிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நெருக்கடிகளின் சுமையானது பால்நிலையாக்கப்பட்டுள்ளது என்பதை கொழும்பில் நாம் ஆற்றிவரும் பணிகள் கோடிட்டுக்காட்டுகின்றன. நேரத்தினைச் சேமிக்கும் உபகரணங்களான துணி துவைக்கும் இயந்திரங்களையும் ரைஸ் குக்கர்களையும் பயன்படுத்தாது கைகளால் அந்த வேலைகளைச் செய்வதன் மூலம் அதிகரித்து வரும் மின்சாரக் கட்டணத்தினைச் சமாளித்தல் முதல் விலைகள் அதிகரிக்கையில் தமது (தமது குடும்பத்தினரினதும்) சொந்தப் போஷாக்கு உள்ளீட்டின் தரம் மற்றும் அளவு என்பவற்றினைச் சமரசம் செய்வது மற்றும் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்காக மேலதிக அல்லது புதிய வருமானப் பிறப்பாக்கச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் வரை, இந்தக் குடும்பங்களில் பெண்களின் நேர வறுமை கணிசமாக அதிகரித்துள்ளது. ஆதரவு வழங்குவதற்கான பாரம்பரிய வலையமைப்புக்களும் அரச சேவைகளும் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால், முதியவர்களின், சிறுவர்களின் மற்றும் நாட்பட்ட சுகாதார நிலைமைகளுடனும் அங்கவீனத்துடனும் வாழும் குடும்ப உறுப்பினர்களின் பராமரிப்புப் பணிகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சுகாதாரப் பராமரிப்புக்கான மற்றும் மருந்துகளுக்கான செலவுகள் அதிகரித்துள்ள காரணத்தினால் பல குடும்பங்கள், குறிப்பாகப் பெண்கள் அத்தியாவசிய மருந்துகளை எடுப்பதைக் குறைத்துள்ளனர் அல்லது நிறுத்தியுள்ளனர். இது இவர்களின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குடும்பச் சுமைகள் கூடி, அதிகரித்த வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையில் காணப்படுவதால் இவர்கள் அதிகமான சுமைகளைத் தங்கள் தோள்களில் சுமத்திக்கொள்கின்றனர்.

நாட்டின் சமூகப் பாதுகாப்பு முறைமை குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் தேவையுள்ள துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் போதாதிருப்பது எந்தளவு மோசமான நிலையில் உள்ளது என்பது நெருக்கடிக் காலப்பகுதியின் போது தெளிவாகப் புலப்பட்டது. தற்போது அமுலில் உள்ள சமூகப் பாதுகாப்பு முறைமைகளுக்குக் குறைவாக நிதியளிக்கப்படுவதோடு மாத்திரமன்றி, அவற்றுக்குத் தகவல்கள் இல்லாதிருக்கின்றன. அத்துடன் அவை சிதறுண்டு காணப்படுவதுடன் நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு இல்லாதிருக்கின்றது. மேலும், கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் மக்கள் பாதிப்புறுநிலையிலுள்ளவர்களாக இருக்கக்கூடிய அல்லது உதவி தேவைப்படுகின்ற வித்தியாசமான வழிகளை உள்வாங்குவதற்கும் போதிய உறுதியற்றதாக அல்லது இயங்குதிறன் அற்றதாக உள்ளது.(பெரெரா, 2025). இலங்கையின் சமூகப் பாதுகாப்பு அணுகுமுறை நிலைமாற்றமிக்கதாக இருப்பதற்கு, அது, சமூகத்தில் பாதிப்புறுநிலையினை ஊக்குவித்து, அதனை உருவாக்கி அதனைத் தக்கவைக்கும் அதிகாரச் சமனிலையின்மையினை நிவர்த்திப்பதற்காக சமூக ஒப்புரவினை மையப்படுத்தும் கொள்கைகளைக் கொண்டிருக்கவேண்டும்.(ஸ்டீபன் டெவரெக்ஸ் மற்றும் ராஹேல் சபேட்ஸ் வீலர், 2004). ஸ்டீபன் டெவரெக்ஸ் மற்றும் ராஹேல் சபேட்ஸ் வீலர் ஆகியோரின் சமூகப் பாதுகாப்புப் பற்றிய மூல நூலில், இலக்குவைக்கப்பட்ட காசு மாற்றங்கள் மற்றும் காப்புறுதித் திட்டங்கள் போன்ற சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையிலான வேறுபாட்டினைக் கண்டறிந்து அவை ‘பொருளாதாரப் பாதுகாப்பு’ எனவும் சமூகப் பாதுகாப்பாக இருக்கவேண்டிய அவசியமில்லை

எனவும் குறிப்பிடுவதுடன், குறைவடைந்து வரும் அல்லது ஏற்ற இறக்கமுடையதாக இருக்கும் வருமானங்களுக்கான பதிற்செயற்பாடாக நுகர்வினைத் தணிக்கும் பொறிமுறைகளைப் போன்று, சமூகப் பாதுகாப்புக்கான தேவை,"பாதுகாப்பு வலை" என்ற குறுகிய அர்த்தத்தில் வரையறுக்கப்படுமானால், அப்போது இடையீடுகளின் கவனக்குவிப்பு என்பது பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கான இலக்குவைக்கப்பட்ட வருமானம் அல்லது நுகர்வு மாற்றங்களில் தர்க்கரீதியானதாக இருக்கும் எனக் குறிப்பிடுகின்றனர்

உழைக்கும் வர்க்கத்தினைச் சேர்ந்த வறிய குடும்பங்களும் முறைசாராத் துறையும் பல்வகைமைமிக்கதாகவும் இயங்குதிறன்மிக்கதாகவும் உள்ளன. பதிற்செயற்பாடாக, சமூகப் பாதுகாப்பு என்பது சமாந்தரமாகவும் படிப்படியாகவும் இயங்கும் முதலீடுகளினதும் இடையீடுகளினதும் தொகுதியாகப் பார்க்கப்பட வேண்டும். உலகளாவிய அதிர்ச்சிகளாலும் சிக்கன நடவடிக்கைகளாலும் அரசிறைச் சீராக்கல்களாலும் உருவாகும் கூட்டிணைந்த நெருக்கடிகளால் குடும்பங்களின் மீது ஏற்படும் தாக்கங்களை ஒரு அல்லது சில நலன்புரி நடவடிக்கைகளால் தணித்து விட முடியாது என்பதற்கான முக்கியமான நினைவூட்டலாகக் கடந்த சில வருடங்கள் இருந்து வருகின்றன. பொருளாதார நெருக்கடியின் போது காசு மாற்றங்களைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும், ஆனால் இது மக்கள் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதை அனுமதிக்கின்றதேயன்றி போஷாக்குப் பிரச்சினையினையோ கற்றல் இழப்பினையோ நிவர்த்திக்கவில்லை அல்லது வாழ்வாதார உதவியினை வழங்கவுமில்லை. அசுவெசும கொடுப்பனவுகளில் அதிகமானவை பயன்பாட்டுக் கொடுப்பனவுக்கே நேரடியாகச் செல்கின்றன, குறிப்பாக மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தவே பயன்படுத்தப்படுகின்றன, ஏனெனில் இக்கட்டணங்கள் நெருக்கடிக் காலப்பகுதியின் போது 75% இனை விட அதிகரித்துள்ளமையினாலாகும் என இக்காலப்பகுதியில் கொழும்பு ஏர்பன் லெப் (Colombo Urban) நடத்திய ஆய்வுகள் காட்டுகின்றன. இலக்குவைக்கப்பட்ட திட்டங்கள் வறுமையும் பாதிப்புறுநிலையும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் தோன்றுகின்றன எனக் கற்பனை செய்து நிரந்த வீடு அல்லது உயர் கல்வி மட்டங்கள் போன்ற சில காரணிகள் இல்லாமை அல்லது இழக்கப்பட்டிருத்தல் போதிய குறிகாட்டிகளாக உள்ளன என ஊகிக்கின்றன. எவ்வாறாயினும், சொத்துக்களை வைத்திருப்பவர்கள் கூட பாதுகாப்பு வலைக்கான தேவையினைக் கொண்டிருக்கலாம் என்ற போதிலும், அவ்வறான மக்கள் சில அபிவிருத்தி மைல்கற்களை அடைந்துள்ளனர் என்ற காரணத்தினால் நெருக்கடியின் போது அவர்களின் சமூகப் பாதுகாப்பினை அகற்றுவது அவர்களின் சமூக – பொருளாதர உரிமைகளைப் பறிப்பதாகும் (பெரெரா, 2025)

முறைசாராத் துறையிலுள்ளவர்களின் வாழ்வாதாரங்களின் நிலையற்றதன்மை மற்றும் அவர்களுக்குத் தொழில் பாதுகாப்பு இல்லாமை என்பன இவர்கள் நெருக்கடியினால் பாதிப்புறுகின்ற நிலையினை அதிகரித்துள்ளன. மோசமடைந்து வரும் சுகாதாரம் மற்றும் போஷாக்கு என்பன உழைக்கும் வர்க்கத்தினரின் தொழில் சக்தியில் தாக்கத்தினைச் செலுத்தும் என்பதுடன் இவர்களில் பலர் ஏனைய உற்பத்தித் திறன் சொத்துக்கள் அற்றவர்களாக உள்ளனர், குறிப்பாக நெருக்கடியின் போதும், சுகவீனத்தின் போதும், அங்கவீனத்தின் போதும் விபத்துக்களின் போதும் முதுமையடைகையிலும் இவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கையில் இந்த நிலை காணப்படுகின்றது. இலங்கையின் சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் வரலாற்று ரீதியாகப் பொருளாதாரப் பாதுகாப்பில் கவனம் செலுத்துபவையாக இருந்து வருகின்ற அதேவேளை (அதாவது: காசு மாற்றங்கள், உணவு முத்திரைகள், உணவுப் பங்கீட்டு அட்டைகள்), 2024 ஆம் ஆண்டின் தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கை அனைவருக்குமான வாழ்க்கை வட்ட அணுகுமுறைக்காக ஆதரித்துவாதாடி, தாக்குப்பிடிக்கக்கூடிய, அணுகக்கூடிய சமூகப் பராமரிப்புக்கான தேவையினைக் கோடிட்டுக்காட்டுகின்றது (தேசிய பாடசாலைப் பாதுகாப்புக் கொள்கை, 2024, பக்.4). 2025 ஒக்டோபரில் வெளியிடப்பட்ட தேசிய சமூகப் பாதுகாப்பு உபாயமார்க்கம் பொருளாதாரப் பாதுகாப்புக்கு அப்பால் செல்ல நாடுகின்றது, அத்துடன் உரிய வளங்களுடனும் போதிய பாதீட்டுடனும் அரசியல் ஆர்வத்துடனும் இது அமுல்படுத்தப்பட்டால் இது நீண்ட காலத்தில் இலங்கைக்கு ஓர் உறுதியான உதவி முறைமையாக இருக்கலாம். இந்த ஆய்வுக்குத் தனித்துவமானதாக, சமூகப் பாராமரிப்புத் தூணுக்கான உபாயமார்க்கமிக்க குறிக்கோள்கள் மிக உறுதியாக அதன் குறிக்கோள்கள் இரண்டில் எதிரொலித்தன – அவையாவன, நிதி, உளவியல், மற்றும் நிறுவன ரீதியான உதவிப் பொறிமுறைகள் மூலம் முறைசாராப் பராமரிப்பு வழங்குபவர்களின் வகிபாத்திரத்தினை வலுப்படுத்தல் மற்றும் கடைசிக் கட்ட அடைவுக்காக உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் தொண்டர்களின் உதவியைப் பெற்று சமுதாய மட்ட பராமரிப்பு வலையமைப்புக்களை விரிவுபடுத்தல் ஆகும்.

# இலங்கையின் பிள்ளைப் பராமரிப்புக் கொள்கை நிலைமை

இலங்கையின் சட்டக் கட்டமைப்பானது சிறுவர் தொடர்பான அரசின் கடமையினை அங்கீகரிப்பதுடன் பிள்ளையின் உரிமை பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் (UNCRC) இலங்கை 1992 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டுள்ளமை உள்ளடங்கலாக சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான முக்கியமான சர்வதேசக் கட்டமைப்புக்களில் கைச்சாத்திட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் பிள்ளையின் உரிமை பற்றிய சாசனத்தினை 1990 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இலங்கை அரசியலமைப்பு அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது, "பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல் வளர்ச்சியை, உளவளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை, முழுமையாக விருத்தி செய்வததனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும் ஓரங்காட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என, அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்துதல் வேண்டும்" (அத்தியாயம் VI, உறுப்புரை 27[13]).

இலங்கையில் தேசிய மட்டத்தில் பிள்ளைப் பராமரிப்பினை ஆளுகை செய்யும் கொள்கைகள், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை (2016-2020) நிவர்த்தி செய்வதற்கான கொள்கைச் சட்டகத்தினையும் தேசிய செயற் திட்டத்தினையும், இலங்கையில் சிறுவர்களின் மாற்றுப் பராமரிப்புக்கான தேசிய கொள்கையினையும் (2019), தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையினையும் (2019), ஆரம்பப் பிள்ளைப்பராயப் பராமரிப்பு மற்றும் விருத்தி பற்றிய தேசியக் கொள்கையினையும் (2018) அதேபோன்று 2017 ஆம் ஆண்டில் பிள்ளைகளுக்கான நாட் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டலையும் உள்ளடக்குவதுடன் இவ்வழிகாட்டலுக்காக வரையப்பட்ட 2024 ஆம் ஆண்டின் இற்றைப்படுத்தலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் நிலுவையாக உள்ளது. பிள்ளைப்பராமரிப்பு ஆளுகை தொடர்பாக இலங்கை பல் – துறை சார்ந்த அணுகுமுறையினை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றது; இதன் காரணமாக, பிள்ளைப்பராமரிப்பு தேசிய மட்டத்தில் எண்ணற்ற அமைச்சுக்களின் ஆளுகையின் கீழ் வருகின்றது. இதில், பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் உள்ளடங்குகின்றன. (வர்ணசூரிய மற்றும் ஏனையோர் 2020). தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA), ஆரம்பப் பிள்ளைப் பராய அபிவிருத்திக்கான தேசிய செயலகம் (NSECD) மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் (DPCS) ஆகியன பிள்ளைப்பராமரிப்பு ஒழுங்குவிதிகளையும் வசதிகளையும் ஆய்வுசெய்து, உருவாக்கி அமலாக்கி நாடு முழுவதும் அமுலாக்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளன. ஆரம்பப் பிள்ளைப்பராய விருத்தி தொடர்பான கொள்கைகளையும் ஒழுங்குவிதிகளையும் உருவாக்குவது, குறிப்பாக நாட்பராமரிப்பு நிலையங்கள் போன்ற பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களுக்காக உருவாக்குவது NSECD இன் பொறுப்பாக இருக்கும் அதேவேளை NCPA ஆனது, நிறுவன ரீதியான கண்காணிப்பு, உளசமூக சேவைகள், சட்ட அமலாக்கல் சேவைகள், துரித தொலைபேசி அழைப்புச் சேவைகள், விசேட பொலிஸ் அலகு உள்ளிட்ட பல செயற்பாடுகளுடன் ஓர் அதிகாரசபையாக இயங்கிவருகின்றது. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் (1987) 154G(1) எனும் உறுப்புரையின் கீழ் முன்பள்ளிகளின் முகாமைத்துவத்திற்காகவும் மேற்பார்வைக்காகவும் மாகாண சபைகளும் சட்டவாக்கங்களை நிறைவேற்றலாம். ஒன்பது மாகாணங்களில் ஆறு மாகாணங்கள் (வட மத்தி, வட மேற்கு, தெற்கு, ஊவா, மற்றும் மேற்கு) ஆரம்பப் பிள்ளைப்பராயப் பராமரிப்பு மற்றும் கல்வி மையங்களுக்காகவும் (உதா: நாட்பராமரிப்பு நிலையங்கள்) முன்பள்ளிகளுக்காகவும் வழிகாட்டல்களையும் நியமங்களையும் உருவாக்குகின்றன (வர்ணசூரிய மற்றும் ஏனையோர் 2020). கொழும்பு மாநகர சபையின் பொது உதவித் திணைக்களம் கொழும்பில் பிள்ளைக் காப்பகங்கள் 3 இனையும் 13 முன்பள்ளிகளையும் இயக்கிவருவதுடன் 27 முன்பள்ளிகளுக்குக் குறைநிரப்பல் நிதியிடலை வழங்கி வருகின்றது. (கொழும்பு மாநகர சபை 2025).

இந்த நிறுவன ரீதியான சட்டகங்களைத் தாண்டி, பிள்ளைப்பராமரிப்பு உட்டகட்டமைப்பானது பெருமளவு தனியார் துறையின் கீழேயே இயக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு பராமரிப்பு நிலையங்களில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின் படி

நாடு முழுவதிலும் 1209 நாட்பராமரிப்பு நிலையங்கள் நடத்தப்பட்டு அவற்றின் மூலம் 23365 பிள்ளைகளுக்குச் சேவை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையங்களில் பெரும்பான்மையானவை கொழும்பு (189) மற்றும் குருணாகலை (200) ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன (NCPA 2024). பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களில் சுமார் 70.8% தனியாரினால் இயக்கப்படுகின்றன எனவும் 6.5% சமய  அமைப்புக்களால் இயக்கப்படுகின்றன எனவும் 3% அரச சார்பற்ற நிறுவனங்களினால் (NGOs). இயக்கப்படுகின்றன எனவும் 2016 ஆம் ஆண்டின; ECD மதிப்பீடு காட்டுகின்றது. எவ்வாறாயினும், தனியாரினால் நடத்தப்படும் ECD நிலையங்களின் செலவுகள் – கட்டணங்கள் போன்ற நேரடிக் கட்டணங்களும் போக்குவரத்து, எழுதுபொருட்கள் மற்றும் உடைகள் போன்ற மறைமுகமான கட்டணங்களும் உள்ளிட்ட கட்டணங்கள் பிள்ளைகளைச் சேர்க்கும் பெற்றோர்களுக்குப் பெரும் தடையாக உள்ளன. மேலும், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கொவிட் பெருந்தொற்று மற்றும் 2021 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி போன்ற நெருக்கடிகள் இந்த நிதிச் சவால்களை மேலும் மோசமாக்கியுள்ளன (நவரத்ன 2023). அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும் ஆரம்பப் பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களுக்கான குறைவான அணுகல் காரணமாகவும் தனியார் துறையினால் இயக்கப்படும் நிலையங்களின் உயர் செலவு காரணமாகவும் 44% பிள்ளைகள் இந்நிலையங்களில் சேர்க்கப்படவில்லை என 2016 ஆம் ஆண்டின் ECD மதிப்பீடு காட்டுகின்றது. வெவ்வேறு வயதுக் குழுக்களைச் சேர்த்துக்கொள்வதை வசதிப்படுத்தவும் தாய்மார்களின் வெவ்வேறு தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதை வசதிப்படுத்தவும், நிலையத்தினை மையப்படுத்திய, வீட்டினை மையப்படுத்திய, மற்றும் வேலைத்தளத்தினை மையப்படுத்திய பிள்ளைப்பராமரிப்பு நிலையங்கள் உள்ளடங்கலாக பல்வேறு ஆரம்பப் பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களுக்கான தேவையினை NCPA மேலும் குறித்துக்காட்டுகின்றது (NCPA 2024). வெகு சொற்பமான துறைகளில், தாய்பாலூட்டும் அறைகள், பிள்ளைக் காப்பகங்கள், மற்றும் நாட் பராமரிப்பு நிலையங்கள் போன்ற களத்திலேயான மற்றும் களத்திற்கு வெளியேயான பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் ஆரம்பப் பள்ளிப் பருவத்திற்கு முன்னைய பிள்ளைகளுக்காகக் கிடைக்கக்கூடியதாக உள்ளன. எவ்வாறாயினும், தொழில்வழங்குனரால் வழங்கப்படும் பிள்ளைப்பராமரிப்பு பல பெண்களை, முறைசாராத் துறைகளில் பணியாற்றும் பெண்களை அவசியமான உதவிகள் இன்றி விட்டுவிடுகின்றது. ஒழுங்குறுத்துகை மேற்பார்வையும் தகுதிவாய்ந்த பணியாளர்களும் இல்லாத, வீட்டை அடிப்படையாகக் கொண்ட பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களைப் பயன்படுத்துவது பற்றியும் NCPA எச்சரிக்கின்றது (NCPA 2024).

# கொழும்பில் வேலை செய்யும் தாய்மார்களும் பராமரிப்பின் நகர உட்கட்டமைப்பும்

இந்த ஆய்வானது பராமரிப்பின் நகர உட்கட்டமைப்பில் கவனம் குவிக்கின்றது. இது சமூகப் பாதுகாப்புத் தொகுதியின் ஒரு கூறாகும்.  இது பராமரிப்புப் பணியாளர்களின் பணிக்கு ஆதரவளிக்கின்ற அல்லது அதனைப் பாதிக்கின்ற நகரச் சூழலின் குறிப்பிட்ட அம்சங்களைக் குறிப்பீடு செய்கின்றது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த நகரப் பெண்கள் முறைசாராத் துறைகளில் தொழிலுக்கு அமர்த்தப்படுவதற்கான அதிக சாத்தியத்தினைக் கொண்டுள்ளதுடன் இவர்கள் நிலையற்ற வருமானத்தினையும் கொண்டுள்ளனர். அத்துடன் பிரசவ விடுப்பு அல்லது ஓய்வூதிய நலன்கள் போன்ற வேலைத்தளப் பாதுகாப்பு மற்றும் நலன்கள் அற்றவர்களாகவும் உள்ளனர். மேலும், இவர்களின் கொடுப்பனவு செலுத்தப்படாத வீட்டு வேலைகள் முதற்கொண்டு பிள்ளைப் பராமரிப்பு வரையான பராமரிப்புப் பணிகளை, நடுத்தர வர்க்கத்தினரைப் போன்று வெளிவளத்திடம் ஒப்படைக்க முடியாதுள்ளனர். இந்த ஆய்வு, கொழும்பில் உள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் குடியிருப்புக்களில் உள்ள உழைக்கும் தாய்மார்களின் வாழ்வினை ஆராய்ந்தது. இதன் போது, வேலை என்பது வருமானம் கொடுக்கும் எந்த ஒன்று எனவும் கருதப்பட்டது. பிள்ளைப் பராமரிப்புத் தெரிவுகளைப் பெண்கள் எவ்வாறு மற்றும் ஏன் தெரிவுசெய்கின்றனர் மற்றும் கைவிடுகின்றனர் என்பதையும் பராமரிப்புச் சுமைகள் அதிர்ச்சிகளால் சிக்கலுக்குள்ளாக்கப்படுகையில் அவர்கள் வீட்டிலும் வேலையிலும் எவ்வாறு சமாளிப்புக்களை மேற்கொள்கின்றனர் என்பதையும் பராமரிப்புப் பணிகளையும் கொடுப்பனவு வழங்கப்படும் பணிகளையும் சமனிலைப்படுத்துவதால் அவர்களின் நலன் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதையும் ஆராய்ந்தது.

## எமது ஆய்வுக்கு இரண்டு கோட்பாடுகள் வழிகாட்டின-

ஒன்று, பராமரிப்பிலும் கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணியிலும் முதலீடு செய்யப்பட வேண்டும், ஏனெனில் அது மனித உரிமையாகும் என்பதுடன் அது ஊழியப் படையில் பெண்கள் பங்குபற்றுவதை இயலுமாக்குகின்றது என்பதற்காக மாத்திரமன்றி அது கூட்டு உதவியினையும் அரசாங்க நிதியிடலையும் பெறும் அருகதையினைக் கொண்டுள்ளது. பராமரிப்பு என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். கொடுப்பனவு செலுத்தப்படாத போதும் குறைத்து மதிப்பிடப்படுகின்ற போதும் கூட – அந்தப் பணி இன்னும் தொடர்கின்றது, உலகில் வேறு எந்த ஊழிய வடிவினையும் போலன்றித் தொடர்கின்றது.

இரண்டு, பராமரிப்பில் மேற்கொள்ளும் முதலீடு பெண்களின் ஒட்டுமொத்த மனநல மற்றும் உடல் ஆரோக்கியம் உள்ளடங்கலாகப் பெண்களுக்கு மாத்திரம் நன்மையளிக்காது அவர்களின் பிள்ளைகளும் குடுமப்பங்களும் சமுதாயங்களும் ஆரோக்கியமான மற்றும் கௌரவமான வாழ்வினை வாழ அவர்களுக்கும் நன்மையளிக்கின்றது. எமது சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் பிரிக்கப்பட முடியாதவையாகும் என்பதுடன் அவை ஒன்றாக எழுகின்றன அல்லது ஒன்றாக வீழ்கின்றன.

# முறையியல்

2025 ஜூன் முதல் நவம்பர் வரையில், நகரத்தில் பராமரிப்பின் நகர உட்கட்டமைப்பினைப் புரிந்துகொண்டு பகுப்பாய்வு செய்வதற்காகவும் நகர உழைக்கும் வர்க்கத்தினருக்கு உதவுவதற்காக இலங்கையின் சமூகப் பாதுகாப்பின் என்ன அம்சங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்காகவும் சுமார் 200 பேருடன் இது நேரடியாக ஈடுபாட்டினை ஏற்படுத்தியது. எமது கலப்பு முறைகளைக் கொண்ட அணுகுமுறை இலங்கையில் வலுவான சமூகப் பாதுகாப்பினை அர்த்தபூர்வமாகப் புரிந்துகொண்டு அதற்கான வழிகளை இணைந்து உருவாக்குவதற்காக உழைக்கும் தாய்மார்களுடன் தரம் சார்ந்த நேர்காணல்களையும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களையும் மனிதர்களை மையப்படுத்திய வடிவமைப்பு முறைகளைப் பயன்படுத்துவதை வடிவமைப்பாகக் கொண்ட செயலமர்வுகளையும் உள்ளடக்கியிருந்தது.

## ஆறு பிரதான தகவலாளர் நேர்காணல்கள்:

எமது வினாக்கொத்திற்கான உள்ளீடுகளைப் பெறுவதற்காகவும் எமது ஆய்வுக் கட்டமைப்புக்கான தகவல்களைப் பெறுவதற்காகவும் பிள்ளைப் பராமரிப்பில் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுடனும் தனிநபர்களுடனும் 6 பிரதான தகவலாளர் நேர்காணல்களை நடத்தினோம்.

## நாற்பத்தைந்து குடும்ப நேர்காணல்கள்:

கொழும்பு ஏர்பன் லெப் அணியினர் மருதானை, குணசிங்கபுர, கொம்பனிவீதி மற்றும் வனாத்தமுல்லை ஆகிய பிரதேசங்களில் உள்ள 4 இடங்களில், உழைக்கும் தாய்மார்களுடன் 2025 ஜூன் முதல் 2025 செப்டெம்பர் வரையில் பகுதியாகக் கட்டமைக்கப்பட்ட 45 நேர்காணல்களை நடத்தியது. வெவ்வேறு பிள்ளைப்பராமரிப்பு ஏற்பாடுகளதும் வெவ்வேறு தொழில் வகைகள் மற்றும் இனத்துவங்களினதும் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மற்றும் புதிய இலக்கு மாதிரிகளை உருவாக்குகின்ற மாதிரிப்படுத்தல் முறை பயன்படுத்தப்பட்டது. பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புக்கள் மற்றும் உயர் மாடி மனைத்தொகுதிகள் இருப்பதன் அடிப்படையில் இடங்கள் தெரிவுசெய்யப்பட்ட அதேவேளை, வருமானம் என்பது மாதிரிகளின் தெரிவுகளில் உள்ளடக்கப்படவில்லை. இதன் காரணமாக பதிலளித்தவர்களில் சிறு அளவினரைக் ‘குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள்’ எனக் கருத முடியவில்லை. உழைக்கும் தாய்மார்கள் எதிர்நோக்கும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பிள்ளைப்பராமரிப்புத் தேவைகளையும் அவர்கள் அதற்காகப் பயன்படுத்தும் தீர்வுகளையும் பற்றி அறிந்துகொள்வதற்காக வெவ்வேறு உபாயமார்க்கங்கள் ஒவ்வொரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டன. மருதானைப் பிரதேசத்தில் உள்ள ஒரு முன்பள்ளியினைப் பயன்படுத்திய தாய்மார்களினதும் முன்பள்ளியினைப் பயன்படுத்தாத தாய்மார்களினதும் கலப்பினைப் பெறுவதற்காக மாதிரியினைப் பெறுதல் நடத்தப்பட்டது. வனாத்தமுல்லையில், சமுதாய உறுப்பினர்கள் பங்குபற்றுனர்களை ஓர் உயர் மாடிக் கட்டிடத் தொகுதியில் இருந்து தெரிவுசெய்தனர். இதற்கான காரணம், மீளக் குடியமர்த்தல், வித்தியாசமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு சூழல் மற்றும் பராமரிப்பு வலையமைப்புக்கள் மீதான அவற்றின் தாக்கம் என்பன எவ்வாறு பிள்ளைப்பராமரிப்புப் பணிகளில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பது பற்றிய உணர்வினைப் பெறுவதேயாகும். கொம்பனிவீதி மற்றும் குணசிங்கபுர ஆகிய இடங்களில் வீட்டுக்கு வெளியே தொழில்களில் ஈடுபட்டிருந்த பங்குபற்றுனர்களைச் சமுதாயத் தலைவர்கள் தெரிவுசெய்ததுடன் இதன்போது வீட்டுப் பணியாளர்களின் மிகை மாதிரிப்படுத்தலும் காணப்பட்டது.

## மூன்று இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள்:

அங்கவீனமான பிள்ளைகளைக் கொண்ட 15 தாய்மார்கள் உள்ளடங்கலாக 37 பங்குபற்றுனர்களுடன் நாம் 3 இலக்குக் குழுக் கலந்துரையாடலை நடத்தினோம். எஞ்சிய 22 பங்குபற்றுனர்களும் குடும்ப நேர்காணல்களின் பாகமாக இருந்தனர். ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டவைகள் பரந்த பகுப்பாய்வுடனும் பரிந்துரைகளுடனும் பங்குபற்றுனர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும் சொந்தப் பரிந்துரைகளும் இந்த அறிக்கையின் இறுதிப் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகளுக்காகக் கருத்திற்கொள்ளப்பட்டன.

## நான்கு தகுதியாக்கல் செயலமர்வுகள்:

கொழும்பில் அமைந்துள்ள குடியிருப்புக்களிலும் உயர் மாடி மனைத்தொகுதிகளிலும் வாழ்பவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 20 சமுதாயத் தலைவர்களுடன் நாம் ஒரு தகுதியாக்கல் செயலமர்வினை நடத்தினோம். இவர்கள் தங்களின் சமுதாயங்களுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதாலும் அத்துடன் பிரதான தீர்மானம் வகுப்போராக இருப்பதாலும் நாம் எமது பிரதான கண்டறிதல்களையும் பரிந்துரைகளையும் அவர்களிடம் சமர்ப்பித்து அவர்களின் பின்னூட்டல்களின் அடிப்படையில் இறுதிப் பெறுபேற்றினைச் சீரமைத்தோம். இதேபோன்று, 2025 நவம்பரில், பஞ்சிகாவத்தை, வனாத்தமுல்லை மற்றும் மட்டக்குளிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 85 பங்குபற்றுனர்களுக்கு நாம் சமூகப் பாதுகாப்புத் தொடர்பாக நான்கு செயலமர்வுகளை நடத்தி இந்த அறிக்கையின் பிரதான பரிந்துரைகள் தொடர்பாக அவர்களின் கருத்துக்களையும் அங்கீகாரங்களையும் கோரினோம்.
நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்புக் கருத்தியல்கள் தொடர்பாகச் சமுதாயங்களின் மத்தியில் விழிப்புணர்வினை உருவாக்குவதிலும் இவை காசுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு அப்பால் செல்வதைக் குறிக்கின்றன எனும் புரிதலை உருவாக்குவதிலும் உழைக்கும் வர்க்க மக்களின் வாழ்க்கைச் சுற்றில் இவை எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்பது பற்றிய புரிதலை உருவாக்குவதிலும் இந்தச் செயலமர்வுகள் குறிப்பாகக் கவனம் குவித்தன.

# நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்பினை நோக்கி: இலங்கையின் பராமரிப்பின் நகர உட்கட்டமைப்பினை வலுப்படுத்தல்

உழைக்கும் தாய்மார்கள் மற்றும் பராமரிப்பின் நகர உட்கட்டமைப்புக்கள் என்பவற்றில் கவனம் குவித்து இலங்கையில் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக இந்தப் பகுதி பரிந்துரைகளின் ஒரு தொகுதியினைச் சமரப்பிக்கின்றது. காலப்போக்கில் இந்தப் பரிந்துரைகள் சமாந்தரமாகவும் படிப்படியாகவும் அமுல்படுத்தப்பட்டால், இவை குடும்பங்களின் மீதான சுமைகளைக் குறைக்கும், வாழ்வாதாரத்திலும், சுகாதாரத்திலும், கல்வியிலும் நீண்ட கால நன்மைகளை இயலுமாக்கும், அத்துடன் வலுவற்ற சமூக ஒப்பந்தத்தினை வலுவாக்கும். இது பெண்கள் அவர்கள் நேர வறுமையினைக் குறைப்பதன் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதை இயலுமாக்குவதுடன் ஓய்வுக்கும் ஓய்வுநேரப் பொழுதுபோக்குக்கும் நேரம் வழங்கி அவர்கள் தங்களின் சொந்தத் தெரிவுகள் மூலம் பொருளாதார ரீதியாக முனைப்பாக இருப்பதையும் இயலுமாக்குகின்றது. சமூகப் பாதுகாப்பு என்பது ஓர் உரிமையாகுமேயன்றி ஒரு தர்மம் அல்ல என்பதை நாம் எமது சமூகப் பாதுகாப்புச் செயலமர்வுகளில் வலியுறுத்தியிருக்கின்றோம் - அதாவது வீடுகளில் இருப்பவர்கள் பாடசாலைக்கும் வேலைக்கும் செல்லக்கூடியதாக இருந்துள்ளது, அவர்கள் உற்பத்தித்திறன் மிக்கவர்களாகவும் ஆரோக்கியமான பிரசைகளாகவும் இருக்கின்றனர், ஏனெனில் பெண்கள் (அவர்கள் வேலைக்குச் சென்றாலும் இல்லாவிட்டாலும்) அவர்களின் கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணிகளின் மூலம் இவற்றினையெல்லாம் இயலுமாக்கியுள்ளனர்.

2025 நவம்பரில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான இரண்டாவது உலக உச்சிமாநாட்டில் அதீத வறுமை மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் விசேட தூதுவரான ஒலிவர் த ஷட்டர் அவரின் உரையில், 2023 ஆம் ஆண்டில் 54 வளர்முக நாடுகள் 10% அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்க வருமானத்தினை அவற்றின் கடன்களைச் செலுத்துவதற்காக ஒதுக்கியுள்ளன என்றும் 3.3 பில்லியன் மக்கள் அவர்களின் கல்விக்கோ அல்லது சுகாதாரத்திற்கோ செலவிடப்படுவதை விடக் கடன்களின் வட்டிக்காக அதிகம் செலவிடும் நாடுகளில் வாழ்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். (த ஷட்டர், 2025).

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திலுள்ள பிரதான தொகைகளுக்கு அமைவாக, 2026 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் 5305 பில்லியன் ஆகும். மதிப்பிடப்பட்டுள்ள செலவினத்தில், 2026 ஆம் ஆண்டு கடன்களை வழங்குவதற்காக 4495 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - இது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 80மூ இற்கும் அதிகமானதாகும் (EconomyNext, 2025). இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் மைல்கற்களை அடைந்து வரும் சந்தர்ப்பத்தில், கடன்களைச் செலுத்துவது என்பது பொருளாதார வளர்ச்சியினை நாடுகள் காட்டவேண்டும் என்பதைத் தேவைப்படுத்துவதால், உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்காகச் செலவிடுவதிலேயே முன்னுரிமை தொடர்ந்து காணப்படுகின்றது. தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கை என்ற அடிப்படையில் நோக்கும்போதும் கூட, பராமரிப்பின் உட்கட்டமைப்பு உள்ளடங்கலாக சமூகப் பாதுகாப்பில் அதிகமாக முதலீடு செய்வதற்கான கடப்பாடு தொடர்ந்தும் போதாததாகவும் குறைந்த முன்னுரிமை வழங்கப்படுவதாகவுமே காணப்படுகின்றது. 2026 வரவு செலவுத்திட்டம் 837 பில்லியன் ரூபாவினைச் சமூகப் பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது. இதில் 231 பில்லியன் ரூபா அசுவெசும காசுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் 0.35 பில்லியன் ரூபா நாட்பராமரிப்பு நிலையங்களின் அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில் இருந்து நிலவிவரும் இலங்கையின் பலவாறான நெருக்கடியின் தாக்கம் பற்றிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பற்றிய எமது ஆய்வானது, பிரசைகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளில் நாம் முதலீடு செய்யாவிட்டால், நீதியான மற்றும் ஒப்புரவான மீளல் ஒருபோதும் இருக்காது என்பதை மிக விரிவாகக் காட்டியுள்ளது. நாம் இச்செயன்முறையின் போது நிலைபேறான முறைமைகளை உருவாக்க வேண்டும் என்பதுடன் இதற்காக நாம் படிப்படியாக ஆரம்பித்துக் கடந்த கால முறைமைகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இது சமூகப் பாதுகாப்பினை நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு தொகுப்பாகச் சிந்திக்குமாறு

எம்மைத் தேவைப்படுத்துகின்றது. இதனால் இவை ஒன்றில் இருந்து மற்றொன்று கட்டமைத்துச் செல்லலாம் அல்லது குறைநிரப்பலாம், நாட்டின் பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்யலாம் அதேவேளை நிலைமாற்றமிக்க மாற்றத்தினையும் வழங்கலாம்.

பராமரிப்பு என்பது வீடமைப்பு நீதி மற்றும் காலநிலை நீதி என்பவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புற்றுள்ளது. இவ்வாறான இடையறுக்கும் தன்மைகளைக் கருத்திற்கொண்டு நாம் பரிந்துரைகளை உருவாக்கியுள்ளோம். எவ்வாறாயினும், இவை அனைத்திலும் பின்புலமாக, பெண்களின் மீது பராமரிப்புப் பொறுப்புக்களைத் தொடர்ந்து சுமத்தும் ஆணாதிக்கப் பால்நிலை மற்றும் சமூக நியமங்களை நிவர்த்தி செய்வது காணப்படுகின்றது. நேர்காணல்களிலும கலந்துரையாடல்களிலும் "தாய்மார்களால்தான் அவர்களின் பிள்ளைகளை ஒழுங்காகப் பார்த்துக்கொள்ள முடியும்" "என்னுடைய கணவர் எமது பிள்ளையினைப் பிள்ளைக்காப்பகத்திற்கு அல்லது நாட்பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்புவதை விரும்பவில்லை" "எமது பிள்ளைகளை வீட்டில் வைத்துப் பார்க்கக்கூடியதாக இருக்கையில் அவர்களை ஏன் வேறு யாரும் பார்த்துக்கொள்ள வேண்டும்" போன்ற கருத்துக்கள் மீண்டும் மீண்டும் கூறப்பட்டதை நாம் கேட்டோம். குறிப்பாகத் தாய்மை மற்றும் பராமரிப்புத் தொடர்பான பால்நிலை நியமங்கள் அகற்றப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் வரையில் மிகவும் முற்போக்கான சட்டங்களிலும் கொள்கைகளிலும் உட்கட்டமைப்புக்களிலும் கூட பெண்கள் இதேபோன்ற ஒப்புரவின்மைகளுக்குத் தொடர்ந்து முகங்கொடுப்பர்.

இந்தப் பரிந்துரைகள் மேலேயுள்ள முறையியலில் குறிப்பிடப்பட்டுள்ள எமது ஆரம்ப ஆய்வினை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதுடன் இது கொழும்பில் குடியிருப்புக்களில் வாழும் உழைக்கும் வர்க்கச் சமுதாயத்தினாலும் உழைக்கும் தாய்மார்களாலும் இணைந்து உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாகும்.

கொழும்பின் உழைக்கும் வர்க்கச் சமுதாயத்தில், ஒரு சம்பளத்தினை மாத்திரம் வைத்துக் கொண்டு வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவது கஷ்டம் என்பதால் பலரும் வாழ்க்கையினைச் சமாளிப்பதற்காக, முறைசாராத்தன்மையினுள் தள்ளப்பட்டு இரண்டாவது வேலை ஒன்றினைத் தேடிக்கொள்கின்றனர் அல்லது சிறு வியாபாரம் ஒன்றினை ஆரம்பிக்கின்றனர். உழைக்கும் தாய்மார்களுக்கு முறைசார் தொழிற் படையினுள் நுழைவது கடினமானதாக இருக்கின்றது அல்லது முறைசார் தொழில்களில் கிரமமான அட்டவணையினைக் கொண்டிருப்பது கடினமானதாக இருக்கின்றது – நாட்கூலித் தொழிலாக இருந்தாலும் அல்லது வீட்டினை அடிப்படையாகக் கொண்ட வியாபாரமாக இருந்தாலும் - இதற்குக் காரணம் இவர்களின் பராமரிப்புக் கடமைகளாகும். இளம் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளக்கூடிய உதவியற்ற குடும்ப உறுப்பினரைப் போன்றவர்களுக்கு முழு நேர வேலை செய்வது அல்லது கிரமமான வேலை செய்வது சாத்தியமற்றதாகும். அவர்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் விடுவதற்கும் கூட்டிவருவதற்கும் இடையில் அல்லாடி, வீட்டுக்கு வந்ததும் அப்பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளும் கடமையினையும் செய்கின்றனர் அத்துடன் பாடசாலைகள் திடீரென மூடப்படுகையில் (உதாரணமாக அதிகூடிய வெப்பத்தினால் அல்லது காலநிலை தொடர்பான பிரச்சினையினால்), அவர்களால் வேலைக்குச் செல்லவே முடியாது. பெண்கள் பொதுவாகக் குறைந்த கொடுப்பனவினை வழங்கும் வேலைகளை அல்லது சுரண்டல்மிக்க வேலைகளை நெகிழ்வுத்தன்மைமிக்க வேலை நேரங்களுடன் ஏற்றுக்கொள்ளும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளதுடன் இக்காரணத்தினால் வீட்டுக்கு அருகிலும் வேலை தேடிக்கொள்கின்றனர். இதனால்தான் மனிதவலு முகவர்களுக்காக வேலை செய்தல் போன்ற நிலையற்ற வேலைகள், அவை தொழில் பாதுகாப்பினைக் கொண்டிராத போதிலும், முறைசாராத் துறையிலுள்ள பெண்களுக்கு விருப்பமானதாகக் காணப்படுகின்றது.

## எமது மூன்று பிரதான பரிந்துரைகள் உள்ளடக்குவன:

1. பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள் தொடர்பான இலங்கையின் கொள்கைகளில் முதலீடு செய்து அவற்றினை மேம்படுத்தல்
2. வீட்டு வேலையாளர்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டங்களை வலுப்படுத்தல்
3. அனைவருக்குமான பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள்

## பரிந்துரை 1: பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள் தொடர்பான இலங்கையின் கொள்கைகளில் முதலீடு செய்து அவற்றினை மேம்படுத்தல்

### பிள்ளைக்காப்பகம் மற்றும் நாட் பராமரிப்பு நிலையங்கள்:

பிள்ளைக்காப்பகங்களையும் நாட்பராமரிப்பு நிலையங்களையும் குறைவாகப் பயன்படுத்துகின்றமையினையும் அவற்றுக்கான குறைவான அணுகலையும் எமது ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது அத்துடன் வளர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலை முடிவடைந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டம் இல்லாமையினையும் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. முன்பள்ளிக்கான அணுகலைக் கொண்டுள்ள தாய்மார்கள் அவர்களின் பிள்ளைகள் வீட்டில் இருக்கும் காலை நேரங்களில் ஏதோ ஒரு வடிவிலான முறைசாரா வேலையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளனர் (காலையில் வீட்டுப் பணியாளாக வேலை செய்வது அல்லது வீட்டினை அடிப்படையாகக் கொண்ட வேலை). நம்பிக்கை, ஈடுகொடுக்கும்தன்மை, வீட்டுக்கும் வேலைத்தளத்துக்குமான தூரம், பால்நிலை நியமங்கள் என்பன அனைத்தும் இந்த உட்கட்டமைப்பு ககளைக் குடும்பங்கள் பயன்படுத்துகின்றனவா என்பதைத் தீர்மானிக்கின்றன. :

நகரத்தில் பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டு நன்கு வளமிடப்பட வேண்டும். இந்த நிலையங்கள் சமுதாயங்களில் அமைந்திருக்க வேண்டுமென்பதுடன் சமுதாயத்தினைச் சேர்ந்த பணியாளர்களை வேலைக்கமர்த்தி அவர்களுக்குப் பயிற்சி வழங்கவேண்டும் என்பதுடன் பெண்கள் ஒரு முழு நாள் வேலை செய்வதற்காக மணித்தியாலங்களை நீட்டிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து என்பன இவ்வாறான நிலையத்திற்குப் பிள்ளையினை அனுப்புவதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் மிக மிக முக்கியம் பெறுகின்றன. அத்துடன், பணியாளர்கள் பயிற்றப்பட்டவர்கள் மற்றும் நம்பிக்கைக்குரியவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும். இதற்கு மேலதிகமாக, தூய்மையான குளியலறைகள், பிள்ளைகள் தூங்குவதற்கும் விளையாடுவதற்கும் பொருத்தமான இடங்கள் என்பன அவசியமானவையாகும். மேலும், இந்த நிலையங்கள் ஒழுங்குறுத்துகை அமைப்பொன்றினால் மேற்பார்வை செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படலாம்.

### பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டம்:

நாட்பராமரிப்பு நிலையங்களும் பிள்ளைக்காப்பகங்களும் பராமரிப்புத் தீர்வுகளாகப் பொதுவாக முன்வைக்கப்படுகின்றன, ஏனெனில், சிறு பிள்ளைகளைக் கொண்ட உழைக்கும் தாய்மார்கள் ஊழியப் படையினில் சேர்வதை இது இயலுமாக்குகின்றது. எவ்வாறாயினும், குறைந்த வருமானம் பெறும் நகரப் பிரதேசங்களில் வாழும் வளரிளம் பருவத்தினர் எதிர்நோக்கும் தனித்துவமான பாதிப்புறுநிலைகளை இது புறக்கணிக்கின்றது. வளரிளம் பிள்ளைகள் பொதுவாகத் தனியாக விடப்படுகையில், சில தாய்மார்கள் இது பற்றிக் கலவரமடைவதுடன் தங்கள் ஆண் பிள்ளைகள் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவார்களோ என்றும் பெண் பிள்ளைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகிவிடுவார்களோ என்றும் பயப்படுகின்றனர். உயர்மாடி மனைத் தொகுதிகளில் வாழும் தாய்மார்களில் பாதுகாப்புக் கரிசணைகள் குறிப்பாக அவதானிக்கப்பட்டுள்ளன. உயர்மாடி மனைத்தொகுதிகளில் போதைப் பொருட்கள் பெருக்கமெடுத்திருப்பதைத் தங்களின் பிள்ளைகளுக்கு ஒரு பாரதூரமான பாதுகாப்புக் கரிசனை என அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர். தங்களின் பெரிய பிள்ளைகள் இதற்கு அடிமையாகிவிடுவார்களோ என அவர்கள் அச்சப்படுகின்றனர். லலனிழு, ஓர் இளம் முன்பள்ளி ஆசிரியை, குறிப்பிடுகையில் போதைப்பொருள் பிரச்சினை இப்போது இளம் பதின்பருவத்தினரைப் பாதித்துவருவதாகக் கூறியதுடன் இடையீடு தேவைப்படும், மிகவும் பாதிப்புறுநிலையிலுள்ளவர்களாக 14 – 16 வயதுக் குழுவினை அவர் அடையாளம் கண்டுள்ளார். வளரிளம் பருவத்தினரில் பெரும்பான்யைமானவர்கள் சாதாரண தரத்தின் பின்னர் பாடசாலையினை விட்டு விலக விரும்புகின்றனர். அதன் பின்னர் அவர்கள் பொதுவாகத் தொழிலற்றவர்களாக உள்ளனர் அல்லது முச்சக்கர வண்டிச் சாரதிகளாக வேலை செய்கின்றனர்.

பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டங்கள், குறிப்பாக, வளர்ந்த பிள்ளைகளுக்கானவற்றினைத் தாய்மார்கள் முழு நேரம் வேலை செய்வதை இயலுமாக்கும் ஒரு வழி எனச் சமுதாயங்கள் வரவேற்றுள்ளதுடன் தமது வீட்டு வேலைகளைச் செய்வதில் உதவுவதற்கு மேலதிகமாக அவர்களுக்குப் புதிய திறன்கள் மற்றும் கலாசாரம் என்பவற்றினை அறியத்தரும் வாய்ப்பினைக் கொண்டதாகவும் நோக்குகின்றனர் – கணினி வகுப்புக்கள் அல்லது நாட்டிய வகுப்புக்கள் போன்றவை. கலை மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான தளங்கள், பராமரிப்பு வசதிகளுக்குப் பின்னரான விளையாட்டு வசதிகள் என்பன கருத்திற்கொள்வதற்கான முக்கியமான தளங்களாகும். ஒரு

தாய் பேசுகையில், பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலையில் நடத்தப்படுவதையே விரும்புவதாகக் குறிப்பிட்டனர். ஏனெனில் பிள்ளையைப் பாடசாலையில் இருந்து வேறொரு இடத்திற்குக் கூட்டிச் செல்லும் தேவை இருக்காது என அவர்கள் குறிப்பிட்டனர். பாடசாலை என்பது நம்பிக்கைக்குரிய இடமாகும் என்பதுடன் தமது பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றித் தாங்கள் யோசிக்க வேண்டியிருக்காது என்றும் குறிப்பிட்டனர். கடந்த சில வருடங்களாக இவர்களின் சமுதாயங்களில் போதைப்பொருட்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புத் தொடர்பாகவும் அவற்றின் பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புத் தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள அச்சங்கள் தொடர்ச்சியாகக் கோடிட்டுக்காட்டப்பட்டன. வெற்றிகரமான சமுதாய மட்ட பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டங்களை சம்பவக் கற்கை 1 எடுத்துவிளக்குகின்றது. இதில், நம்பிக்கையினதும் ஈடுகொடுக்கும் தன்மையினதும் பாதுகாப்பினதும் பல்வேறு வயதினைச் சேர்ந்த சிறுவர்களின் அர்த்தபூர்வமான ஈடுபாடும் இதன் செயற்பாட்டில் ஒரு வெற்றியாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

## அங்கவீனமான பிள்ளைகளுக்கான பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள்:

அங்கவீனமான பிள்ளைகள் மற்றும் வளர்ந்தவர்களுக்கான பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள் இல்லாமையானது அங்கவீனமான பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்களுடனான எமது நேர்காணல்களின் போது சுட்டிக்காட்டப்பட்ட பிரதான குறைபாடாக இருந்தது. கடுமையாக நோய்வாய்ப்பட்ட அல்லது அங்கவீனமான பிள்ளைகளைக் கொண்ட பெண்கள் அப்பிள்ளைகளின் மேலதிக தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கையில், பராமரிப்புச் சுமையின் தீவிரம் மிக உயர்ந்ததாகக் காணப்பட்டது. பல சந்தர்ப்பங்களில், பெண்கள் அவர்கள் தொழிற் படையினை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் வாழ்க்கையே அவர்களின் பிள்ளைகளின் பராமரிப்பினைச் சுற்றிச் சுழல்வதாகக் காணப்பட்டது. இவர்களில் அதிகமானவர்கள் வாசனைத் திரவியங்களைப் பொதிசெய்தல் அல்லது உணவு விற்பனை போன்ற சிறு அளவிலான வீட்டு வியாபாரத்தினை மாத்திரமே நிறைவேற்றக்கூடியவர்களாக இருந்தனர்.

பௌதிக ரீதியாக, அங்கவீனமான பிள்ளைகளைப் பராமரிக்கும் பணி மிகக் கடினமானதாகும் ஏனெனில் பெற்றோர்கள் பிள்ளையின் விருத்தியின் ஒவ்வொரு கட்டத்தின் போதும் சவால்களுக்கு முகங்கொடுத்ததைக் குறிப்பிட்டனர். மேலும், இவர்களின் பிள்ளைகள் வளர்ந்தவர்களாக ஆகுகையிலும் பராமரிப்புச் சுமைகள் தொடர்ந்தன. தங்களின் பிள்ளைகள் தாமாகவே உணவு உண்ணக்கூடியவர்களாக இருந்தாலும் கழிப்பறைக்குச் செல்வது மற்றும் குளிப்பது போன்ற விடயங்களில் தாம் உதவ வேண்டியிருக்கின்றது எனக் குறிப்பிட்டனர். மேலும், அங்கவீனமான வளர்ந்த பிள்ளைகளை இப்போது உடல் ரீதியாகக் கையாள்வது, குறிப்பாக வயது முதிர்ந்த பெண்களுக்கு உடல் ரீதியாகக் கடினமானதாகும்.

## முறைசார் துறையில் பிள்ளைக்காப்பகம் மற்றும் நாட்பராமரிப்பு நிலையங்கள்:

பெண்கள் முறைசார் துறையில் தொழில் தேடாமைக்கும் பொதுவாக முறைசாரா வேலைகளில் ஈடுபடுவதற்குமான ஒரு பிரதான காரணம் முறைசாராத் துறை வழங்கும் நெகிழ்வுத்தன்மையாகும். நேர்காணல் செய்யப்பட்ட முறைசார் துறையில் வேலை செய்பவர்கள், பராமரிப்புக்கான வசதிகளைக் கொண்டிருப்பது (உதாரணமாக, பாட்டன் அல்லது பாட்டி போன்றவர்கள்) அவர்கள் முழு நேரம் வேலை செய்வதை இயலுமாக்கியுள்ளது. ஆனால் முறைசார் துறை பிள்ளைக்காப்பகத்தினையும் நாட் பராமரிப்பு வசதிகளையும் சகல பணியாளர்களுக்கும் வழங்கினால், குறிப்பாக, தேநீர்ச் சேவை வழங்குவதற்கு அல்லது துப்பரவுச் சேவை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டவர்கள் – இது தாய்மார்கள் முறைசாராத் துறைத் தெரிவுகளுக்கு வெளியே தொழில் தேடுவதை இயலுமாக்கும்.

## பராமரிப்பாளர்களைப் பராமரித்தல்:

உலகின் ஏனைய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பராமரிப்பின் புதிய மாதிரிகளைப் பார்க்க வேண்டும். இங்கே வசதிகள் வெறுமனே பிள்ளைப் பராமரிப்பு என்பதைத் தாண்டிச் செல்கின்றன. ஓய்வுநேரப் பொழுதுபோக்கிற்கான இடங்கள், தாய்மாருக்கான ஓய்வு, பிள்ளைகள் கவனிக்கப்படுகையில் தாய்மார்கள் வகுப்பில் அல்லது கற்கைநெறியில் சேர்ந்து தங்களின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் வசதி, ஏனைய வளர்ந்தவர்களுடன் இணைந்து சமுதாயத்தினை உருவாக்குதல் அல்லது அரசாங்கச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தலுக்கான அணுகல் என்பன இந்நாடுகளில் காணப்படுகின்றன. இப்பெண்கள் அவர்களின் வார இறுதி நாட்களை அல்லது ஓய்வு நேரங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பது பற்றிய நேர்காணல்களில் இருந்து அப்பெண்கள் அவ்வாறான நேரத்தினைத் தமது பிள்ளைகளுக்காக அல்லது குடும்பங்களுக்காகப் பயன்படுத்தியமை

தெரியவந்ததுடன் அவர்கள் அரிதாகவே தமக்காக எதையாவது செய்கின்றனர் என்பதும் தெரியவந்தது. உழைக்கும் வகுப்புச் சமுதாயங்களுக்கான தெரிவுகளாக இவை இருக்கின்றன எனச் சிந்திப்பதற்கு எமது வகுப்புப் பக்கச்சார்புகள் எம்மை அனுமதிக்காத அதேவேளை,கொலம்பியாவிலுள்ள பொகொட்டா போன்ற நகரங்களில்- நகரமானது அதன் பொகொட்டா பராமரிப்புத் தொகுதியின் மூலம் முன்னணியில் திகழ்கின்றது (சம்பவக் கற்கை 2 இனைப் பார்க்கவும்). இவ்வாறான கொள்கைகளின் வடிவமைப்பிலும் அமுல்படுத்தலிலும் சமுதாயங்களை அர்த்தபூர்வமாக ஈடுபடுத்துவதே பிரதானமானதாகும்.

## சம்பவக் கற்கை 1: வளரிளம்பருவத்தினருக்கான பராமரிப்பு – பராமரிப்பு உட்கட்டமைப்பாக பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டம்

சாந்தி* கொழும்பிலுள்ள ஒரு பிரபலமான ஆண்கள் பாடசாலையில் கற்பிக்கின்றார். ஆனால், அவரின் வீட்டுக்கு அருகில் தோட்டங்களில் வசிக்கும் பிள்ளைகளுக்கு 2003 ஆம் ஆண்டில் இருந்து தனியார் வகுப்பு நடத்துகின்றார். நிலவும் கேள்விக்கு அமைவாக அவரின் வீட்டில் வசதிகள் இல்லாமையினால், சில வருடங்களுக்கு முன்பு அவரின் மாணவர்கள் சிலரின் துணையுடன் தோட்டமொன்றில் வகுப்புக்களை நடத்துவதற்காக ஒரு வீட்டினைக் கண்டறிந்தார். இந்த வீட்டில் அடிக்கடி வெள்ளம் வருவதாலும் போதிய இடங்களும் வசதிகளும் இல்லாததாலும் அவர் அண்மையில் பிரதான வீதியில் அமைந்துள்ள ஒரு நிரந்தரமான இரண்டு மாடிக் கட்டிடத்திற்கு நகர்ந்துள்ளார்.

ஒரு சிறந்த இடத்திற்கு நகர்ந்தமையினால் அவரால் வகுப்புக்களை விஸ்தரிக்கக் கூடியதாக இருந்ததுடன் இப்போது அவரின் வகுப்பில் 89 மாணவர்கள் இணைந்துள்ளனர். இவர்களுள் 50 மாணவர்கள் கிரமமாகக் கொடுப்பனவு செலுத்துகின்றனர்,அத்துடன் ஏனைய ஆசிரியர்கள் வகுப்புக்களை நடத்துவதற்கும் இவர் இட வசதி வழங்கி, அதிகமான தனியார் வகுப்பு நிறுவனங்கள் செய்வது போன்று 10% கமிசனாக (தரகுப் பணமாக) வைத்துக்கொள்கின்றார். மேம்படுத்தப்பட்ட வசதிகளின் காரணமாக நகரத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஆசிரியரினால் வகுப்புக்களில் சேர்வதற்குக் கவரக்கூடியதாக இருந்து வருகின்றது. தோட்டங்களைச் சேர்ந்த கொடுப்பனவு செலுத்த வசதியற்ற மாணவர்களும் இதில் அடங்குகின்றனர். முதலாம் தரம் முதல் உயர் தரம் வரையான சகல தரங்களுக்கும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

அருகிலுள்ள தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பொதுவாக நிலையற்ற மற்றும் பாதுகாப்பற்ற வீட்டுச் சூழலையே கொண்டுள்ளனர். சாந்தியின் கருத்தின் பிரகாரம், குடும்பத்தில் தாயே பிரதான வருமானம் ஈட்டுபவராக உள்ள குடும்பங்களில் இருந்தே பல மாணவர்கள் வருகின்றனர் ஏனெனில் தகப்பன்மார்கள் இல்லாதிருக்கின்றனர் அல்லது தொழில் இல்லாதிருக்கின்றனர். சில மாணவர்கள் அவர்களின் பாட்டன் பாட்டியுடன் வாழ்கின்றனர். ஏனெனில் இவர்களின் தாய்மார்கள் வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். தாய்மார்கள் அதீத சுமையினைக் கொண்டுள்ளனர் என்றும் பிள்ளைகள் பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் குறிப்பிட்ட சாந்தி, பிள்ளைகளுக்குத் தேவைப்படும் போதிய பராமரிப்பினையும் கவனத்தினையும் வழங்க முடியாது அவர்கள் அயர்ச்சியும் மனவழுத்தமும் உள்ளவர்களாக இருப்பதாகத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தப் பகுதியில் உள்ள தோட்டங்கள் பெண்களின் முனைப்பான கூட்டுறவுகளைக் கொண்டுள்ளதுடன் பல குடியிருப்பாளர்கள் முன்பு சமுர்த்தி எனக் குறிப்பிடப்பட்டு, தற்போது அசுவெசும என அழைக்கப்படும் சமூக உதவியினைப் பெற்று வருவதுடன் கடன்களுக்காகப் பெண்கள் வங்கியினையும் அணுகக்கூடியவர்களாக உள்ளனர். மேலும், இவர்கள் உள்ளூர் அரசியல்வாதிகளின் பெரும் கவனத்தினைப் பெறுகின்றனர். அதாவது இவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் என்பன வழங்கப்படுகின்றன. இது பெற்றோர்கள் மீதான அதேபோன்று சாந்தி மீதான சுமையினைக் குறைக்கின்றது. மேலும், மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் 1 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தினுள் வசிப்பதால் அவர்கள் பிரபலமான பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். எவ்வாறாயினும், மேலதிக பாடசாலைச் செலவுகளைச் சமாளிப்பதற்குப் பெற்றோர்கள் சிரமப்படுவதுடன் இதன் விளைவாக மாணவர்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாதவர்களாக உள்ளனர்.

வேறு எந்த ஒரு தனியார் வகுப்பு நிலையமும் இயங்குவது போன்று இந்த நிறுவனம் இயங்கினாலும், இது சிறப்புரிமை கிட்டாத இளைஞர்களுக்கான ஒரு சமுதாய வெளியாகவே அதிகம் செயற்படுகின்றது. மாணவர்கள் பாடசாலை முடிந்த பின்னர் 2 மணியளவில் வந்து பொதுவாக இரவு 10 மணியாகும் வரையில் இருக்கின்றனர். ஏனெனில் இவர்களின் தாய்மார்கள் வேலை செய்கின்றனர், அத்துடன் இவர்களின் வீட்டுச் சூழல் சத்தம் நிறைந்ததாகவும் உறுதியற்றதாகவும் காணப்படுகின்றது. இவர்களுக்கு வகுப்புக்கள் இல்லாதபோதும் கூட, குடும்பப் பிணக்குகளில் இருந்து தப்புவதற்காக அல்லது ஏனையோருடன் நேரம் செலவளிப்பதற்காக மாணவர்கள் இங்கே வந்து போகக்கூடிய நிலைமையே காணப்படுகின்றது. 'வகுப்பு முடிந்த பின்னர் வீட்டுக்கு அனுப்புவது கடினமாக இருக்கின்றது – சிலவேளைகளில் நீண்ட நேரம் வகுப்பெடுக்குமாறு அவர்கள் என்னைக் கேட்கின்றனர், ஏனெனில், அவர்களுக்கு வீட்டுக்குச் செல்வதற்கு விருப்பமில்லை.' தோட்டத்தினைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிறுவனம் அவர்களின் இரண்டாவது வீடாகவே தோன்றுகின்றது. சில மாணவர்கள் அவர்களின் வீட்டிலுள்ளதை விட நிறுவனத்தில் உள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்த விரும்புவதைக் காண முடிகின்றது. தனியார் வகுப்புக்கு அப்பால் சாந்தி சில செயற்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளார். வெவ்வேறு பண்டிகைகளுக்கு அவர் வகுப்பறைகளை அலங்கரிக்கின்றார். சிறுவர் தினத்தன்று அவர் ஒரு திரைப்படத்தினைக் காட்சிப்படுத்தி சிறுவர்களுக்காக பொப்ஹோர்ன் இயந்திரத்தினைக் கூட வரவழைத்திருந்தார். நகரத்தினூடே பயணிப்பதற்கு மாணவர்களைச் சாந்தி அழைத்துச் சென்றிருக்கின்றார். ஓய்வுநேரப் பொழுதுபோக்கு என்ற கருத்தியலை அறியாத குடும்பங்களில் இருந்து இந்த மாணவர்கள் வருகின்ற காரணத்தினால் இவர்கள் விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் வாழ்ந்தாலும் அப்பூங்காவுக்குக் கூடச் சென்றிராதவர்களாக இருக்கின்றனர்.

மாணவர்களைப் பாதுகாப்பதில் சாந்தி ஒரு முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கின்றார். வளர்ந்த பிள்ளைகளுக்கு அவர் ஆற்றுப்படுத்தல் வழங்குகின்றார், குறிப்பாகப் பெண் பிள்ளைகளுக்கு வழங்கி அவர்கள் பாடசாலையினை விட்டு இடைவிலகுவதை நிறுத்தி அவர்கள் சுரண்டலும் பாதுகாப்பும் அற்ற சூழலுக்குள் விழுவதையும் தடுத்துள்ளார். தனியார் வகுப்பு நிறுவனம் ஒரு பாதுகாப்பான இடம் என்பதையும் அவர் உறுதிப்படுத்துகின்றார் – உதாரணமாக, தனியார் வகுப்புக்காக இடத்தினைப் பயன்படுத்தும் ஆண் ஆசிரியர்கள் அவர்களின் வகுப்புக்களைத் திறந்த அறையில் நடத்தவேண்டும் என்பதுடன் அதனை வீதியில் இருந்தும் சாந்தியினாலும் கண்காணிக்க முடியும்.

இது போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு ஒரு பொருத்தமான இடத்தினைக் கண்டுபிடிப்பதே தடையாக இருக்கின்றது என்பதைச் சாந்தி அடையாளம் கண்டுள்ளார். உதாரணமாக, இவரின் தொழில்முயற்சியின் தன்மை காரணமாக குறைவான வாடகையினைப் பெற்ற போதிலும் இவர் மாதாந்தம் 100,000 ரூபாவினைச் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கு நிதியிடக்கூடிய ஏனைய மாணவர்களைக் கவர்வதற்கு இந்த அமைவிடம் இவரை இயலுமாக்குகின்ற அதேவேளை, இலாப நட்டமின்றி இயங்கும் நிலையினைத் தன்னால் அடைய முடியும் என்ற நம்பிக்கையினை அவர் கொண்டுள்ளார். அத்துடன் வாடகையினைச் செலுத்துவதற்காக அவர் கடனும் எடுத்துள்ளார்.

மேலும், இந்த மாதிரிக்குச் சாந்தி கொண்டுவந்த நேரம், முயற்சி மற்றும் உந்துதல் காரணமாக இது நிலைபேறானதாகும். இவரின் முயற்சிக்காக தனியார் வகுப்பு நிறுவனம் இவருக்கு எதையும் செலுத்தவில்லை, மாறாக, இவர் தனிப்பட்ட தனியாள் வகுப்புக்களை நடத்தி மேலதிக வருமானத்தினைப் பெறுவதற்காக அவரின் பாடசாலையில் மேலதிக பொறுப்புக்களை எடுத்துக்கொண்டார். சமூகப் பணி மற்றும் சமுதாயச் சேவை என்கின்ற விழுமியங்களால் சாந்தி உந்தப்பட்டார். இவர் ஒவ்வொரு நாளும், வார இறுதி நாட்களில் கூட நிறுவனத்தில் பணியாற்றித் தனக்கு விடுமுறை தேவை என்கின்ற காரணத்தினால் போயா தினத்தன்று மாத்திரமே விடுமுறை எடுத்துக்கொண்டார். பாடசாலை விடுமுறை நாட்களில், மாணவர்களுக்கு அவர் நிறுவனத்தில் இருந்து சில நாட்களைத் தவிர ஒருபோதுமே விடுமுறை வழங்கவில்லை. இதனைத் தக்கவைப்பதில் சம்பந்தப்பட்டுள்ள அதீத தனிப்பட்ட முயற்சியின் காரணமாக, இந்த நிறுவனத்தினைப் போன்ற மாதிரியினைப் பிரதிசெய்வது நிச்சயமற்றதாகும். இலாபநோக்கற்ற கடப்பாட்டினைக் கொண்ட ஒரு சிறு அணியினால் இதனைப் பிரதிசெய்ய முடியும் எனச் சாந்தி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பாடசாலை முடிந்த பின்னரான ஏனைய நிகழ்ச்சித்திட்டளுக்குச் சில பிரதான கண்டறிதல்கள் பயன்மிக்கதாக இருக்கும். முதலாவதாக, இளம் வளரிளம் பருவத்தினரால் பயன்படுத்தப்படுவதற்காக பிள்ளைப்பராமரிப்பு மற்றும் சமுதாய இடங்களுக்கான கேள்வி இருக்கின்றது. இரண்டாவதாக, பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளை தனியார் வகுப்புக்கு அனுப்புவதற்காக ஆர்வம் கொண்டுள்ளனர். ஏனெனில், அது ஒரு

* அனைத்து பெயர்களும் அநாமதேயமாக்கப்பட்டுள்ளன.

கல்வித் தேவையாக நிலைபெற்றுள்ளது. தனியார் வகுப்பு சம்பந்தப்படுகின்ற ஒரு பராமரிப்பு மாதிரியினை மையப்படுத்துவது அது நிதி ரீதியாக நிலைபேறானது என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. ஏனெனில், பெற்றோர்கள் ஏனைய செலவினங்களுக்குச் செலவிடுவதை விட தனியார் வகுப்புக்குச் செலவிடுவதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். அத்துடன், கட்டணக் கட்டமைப்புக்கள் மூலம் சிலரிடம் பெறும் கட்டணத்தினைக் கொண்டு சிலருக்கு மானியம் வழங்குவதற்கான சாத்தியத்தினையும் இது உருவாக்குகின்றது. மூன்றாவதாக, ஆசிரியர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டு நம்பப்படுகின்றனர். அதாவது, பெற்றோர்களின் எதிர்ப்போ அல்லது கண்டனமோ இன்றி அவர்களால் தங்களின் ஆணையினையும் நோக்கெல்லையினையும் கல்வி சாராத செயற்பாடுகளினுள் விரிவாக்க முடிகின்றது.

இலவசக் கல்வியினை தனியார் வகுப்பு பாதித்துவருகின்றது. இது சமூகப் பாதுகாப்பின் முக்கியமான ஒரு கூறாகும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பிள்ளைப்பராமரிப்பினை வழங்குவதற்காக நிழல் கல்வி முறைமையினைப் பயன்படுத்துவது ஒரு நிலைபேறான தீர்வல்ல, குறிப்பாக, அரசு இளைஞர்களில் முதலீடு செய்து இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டியிருப்பது, செல்வந்தக் குடும்பங்களுக்கு நன்மைகளை வழங்குவதை விட இலவசக் கல்வியின் பாகங்களாக இருக்கின்றது. எவ்வாறாயினும், பாடசாலை முடிந்த பின்னரான ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பிரயோகிக்கக்கூடிய ஒரு கற்றல் என்பது கல்வி மீதான ஒரு வலியுறுத்தலாகும், குறிப்பாக, ஆங்கில வகுப்புக்கள் பெற்றோர்களின் அங்கீகாரத்துடன் வளரிளம் பருவத்தினரைக் கவர்ந்து சமுதாயத்துடனான நம்பிக்கையும் அங்கீகாரமும் தாபிக்கப்பட்ட பின்னர் விரிவாக்கப்பட்டு முன்னேற்றப்படக்கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்கான அடிப்படையினை உருவாக்குகின்றது. இந்தச் சம்பவக் கற்கையில் இருந்து பெறக்கூடிய பிரதான பாடம், பராமரிப்பாக தனியார் வகுப்பை விரிவாக்க வேண்டும் என்பது பெரும் விவாதத்துக்குரியதல்ல ஆனால் சமுதாயத்துடன் கேள்வியினால் உந்தப்பட்ட நிலைபேறான ஈடுபாடு இறுதியில் பராமரிப்பு மற்றும் உதவியின் மிகவும் பன்முகமான உட்கட்டமைப்பினை உருவாக்கும் என்பதாகும்.

## சம்பவக் கற்கை 2: கொலம்பியா, பொகொட்டவில் பராமரிப்புத் தொகுதிகள்

பராமரிப்புப் பணிகளுக்கு உதவுவதற்கான முயற்சிகளை உள்ளூராட்சிகள் எவ்வாறு இயக்கலாம் என்பதற்கான ஒரு தனித்துவமான உதாரணத்தினை பொகொட்டா வழங்குகின்றது. கொடுப்பனவு செலுத்தப்படாத பணிகளைப் பற்றி மீளச் சிந்திப்பதற்கான ஒரு வழியாகப் பராமரிப்புத் தொகுதிகளை நகரத்தின் மேயராகத் தெரிவுசெய்யப்படவுள்ள முதற்பெண்மணியான குளோடியா லோபஸ் திட்டமிட்டார். இந்த அணுகுமுறையின் தனித்துவம் என்னவென்றால், மேயர் முதலாவது தொகுதியினைத் திறந்து வைத்து விளக்கியது போன்று “இது வெறுமனே பராமரிப்பினை அடையாளம் கண்டு மீள விநியோகிப்பது மாத்திரமல்ல”, “ஆனால், பராமரிப்பு வழங்குபவர்களுக்கு நேரத்தினைக் கிடைக்கச் செய்து அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதுமாகும்”. “பொகொட்டாவிலுள்ள பராமரிப்புத் தொகுதிகள் நகரத்தின் பல பகுதிகளிலும் அமைந்துள்ளது. இது அணுகுபவர்கள் நடந்துசென்று அணுகும் விதத்தில் அமைந்துள்ளதுடன் அருகில் வசிக்காதவர்களுக்காக இலவச போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன. இவற்றின் உட்கட்டமைப்பும் சேவைகளும் பராமரிப்பு வழங்குபவர்களுக்கு நெருக்கமான மற்றும் சமகாலப் பராமரிப்பினைப் பராமரிப்பு வழங்குபவர்களுக்கும் பராமரிப்புப் பெறுபவர்களுக்கும் வழங்குவதுடன் பராமரிப்பினையும் உபாயகரமான நகரத் திட்டமிடலையும் பால்நிலைக் கண்ணோட்டத்துடன் இணைக்கும் காணிப் பாவனைத் திட்டமிடலைப் பின்பற்றுகின்றது. பராமரிப்புத் தொகுதிகள் முதியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் அங்கவீனமானவர்களுக்கும் இலவச பராமரிப்பினை வழங்கி பராமரிப்பு வழங்குனர்களுக்கு நேரத்தினைப் பெற்றுக்கொடுக்கின்றது. இதன் விளைவாக, பராமரிப்பாளர்களால் வேலைக்கு மாத்திரம் செல்லக்கூடியதாக இருக்காமல், வகுப்புக்களுக்குச் செல்லக்கூடியதாகவும் திறன் பயிற்சியினைப் பெறக்கூடியதாகவும் இலவசமாகத் துணிகளைத் துவைக்கக்கூடியதாகவும் நீ ச்சலடிக்கக் கூடியதாகவும் ஏனைய ஓய்வுநேரப் பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியதாகவும் இருந்தது. பொகொட்டா நகர அரசாங்கத்தின் கருத்துப்படி, “2020 ஒக்டோபரிற்கும் 2023 மே மாதத்திற்கும் இடையில் 19 பராமரிப்புத் தொகுதிகளையும் இரண்டு பராமரிப்பு பஸ்களையும் பொகொட்டா ஆரம்பித்து வைத்தது. இது 2021 மார்ச் முதல் 420000 இற்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கியது. தேசிய பயிற்சிச் சேவைகளுடன் இணைந்து இது 12000 இற்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பயிற்சி வழங்கி உயர் கல்லூரிப் பட்டம் பெறுவதில் 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு உதவியது. நாம் 86000 இற்கும் மேற்பட்ட பராமரிப்புவழங்குனர்களின் வாழ்வினை நிலைமாற்றியுள்ளோம். இவர்கள் முதந்தடவையாக ஓய்வெடுப்பதற்கும் உடற்பயிற்சி செய்வதற்கும் அவர்களின் சொந்தச் செயலாண்மையினை மேம்படுத்துவதற்கான

நேரத்தினையும் சேவையினையும் பெற்றுள்ளனர்".
இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சட்டத்தில் பொதியப்பட்டுள்ளமையே அவற்றினை உண்மையிலேயே நிலைமாற்றமிக்கதாக ஆக்குகின்றது – பொகொட்டாவிலுள்ள பராமரிப்பு முறைமை 2023 ஆம் ஆண்டில் நகரச் சட்டமாக மாறி அது தொடர்ச்சியினையும் நிரந்தரத்தினையும் வருகின்ற நிர்வாகத்தில் பராமரிப்பு முறைமையின் விரிவாக்கத்தினையும் உறுதிப்படுத்துகின்றது.

மூலம்: மோரோ 2024 மற்றும் அரச துறைப் புத்தாக்கத்தின் அவதானநிலையம், 2022 மற்றும் 2023

## சம்பவக் கற்கை 3: இந்தியாவில் தொழிலாளர் கூட்டுறவு மாதிரிகள்

சுய தொழில்புரியும் பெண்களின் சங்கம் (SEWA) முறைசாராப் பொருளாதாரத்தில் உள்ள பெண் தொழிலாளர்களுக்கான ஒரு தொழிற் சங்கமாக 1972 ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டது. இது 21 லட்சம் உறுப்பினர்களுடன் ஒரு சங்கமாகவும் ஓர் இயக்கமாகவும் செயற்பட்டு இந்தியாவிலுள்ள 18 மாநிலங்களில் உள்ள பெண் தொழிலாளர்களை ஒழுங்கமைத்து வருகின்றது. SEWA வின் உறுப்பினர்கள் கைத்தொழிலாளர்களாகவும் சேவை வழங்குனர்களாகவும் இருப்பதுடன் இவர்களுள் விவசாயத் தொழிலாளர்கள், வீட்டு வேலையாட்கள், தெரு வியாபாரிகள், வீட்டினைத் தளமாகக் கொண்ட தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். முழு நாள் பிள்ளைப் பராமரிப்புக்கான பெண் முறைசாராத் தொழிலாளர்களின் அவசரமான தேவைக்கு பதிற்செயற்பாடாற்றி, சங்கினி என அழைக்கப்படும் பிள்ளைப் பராமரிப்புக் கூட்டுறவினை SEWA உருவாக்கியுள்ளது. இது உறுப்பினர்களுக்காக 11 நிலையங்களை நடத்திவருகின்றது. இந்தப் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் இந்தியாவின் அஹமதாபாத்தில் முழு நேரப் பராமரிப்பினை வழங்கிவருகின்றது. இவை வார நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப.5.00 மணி வரை இயங்கிவருவதுடன் ஆறு வயது வரையான 350 பிள்ளைகளுக்குச் சேவையாற்றி வருகின்றது. ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 35 பிள்ளைகளைக் கொண்டுள்ளதுடன் பல்சேவிகா என அழைக்கப்படும் இரண்டு பிள்ளைப் பராமரிப்புப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. பல்சேவிக்காக்கள் சிறுவர்களும் முறைசாராப் பெண் தொழிலாளர்களும் வருகின்ற அதே சமுதாயத்தில் இருந்தே வருகின்றனர். கூட்டுறவு பங்குடைமையாளர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் அதன் பயனாளர்களாகவும் முகாமையாளர்களாகவும் உரிமையாளர்களாகவும் உள்ளனர் – இதில் பிள்ளைப் பராமரிப்புப் பணியாளர்கள் மற்றும் தாய்மார்கள் உள்ளடங்குகின்றனர். இது ஜனநாயக ரீதியாக இயக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தேர்தல் நடத்தப்படுகின்றது. இதில் ஏழு முதல் ஒன்பது சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். சபை உறுப்பினர்கள் அனைவருமே கூட்டுறவில் பணியாற்றும் பல்சேவிக்காக்களாகும். கூட்டுறவு ஒரு சாதாரண கட்டணத்தினைப் பெற்றோர்களிடம் இருந்து அறவிட்டு பதிலாக குடும்பத்தின் மீது வேறு எந்த மேலதிக நிதிச் சுமையும் சுமத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. பெற்றோர்களால் செலுத்தப்படும் கட்டணங்கள் ஒரு பிள்ளைக்கான மொத்தச் செலவில் மூன்றில் ஒன்றினை மாத்திரமே உள்ளடக்குகின்றது. எஞ்சிய இயக்கச் செலவுகள் சமுதாயக் கொடைகள் மூலமும் (உதா: உணவு வழங்கல்கள்), கொடையாளர் மானியங்கள் மூலமும் அரசாங்க மானியங்கள் மூலமும் உள்ளடக்கப்படுகின்றன. சங்கினி கூட்டுறவு இந்திய ரிசேர்வ் வங்கியின் ஊழியர்களுக்கும் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகளை வழங்குகின்றது. இந்த ஊழியர்களிடம் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள் முறைசாராத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான ஏனைய 11 நிலையங்களில் அறவிடப்படுபவற்றினை விட அதிகமானதாகும் என்பதுடன் இதில் இருந்து கிடைக்கும் வருமானம் ஏனைய நிலையங்களை நடத்துவதற்கு ஏற்படும் செலவுகளைச் சமாளிப்பதற்கு உதவுகின்றது.

மூலம்: SEWA, 2022

## பரிந்துரைகள் 2: வீட்டுப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டங்களை வலுப்படுத்தல்

இலங்கை 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கத் தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் தேசிய குறைந்தபட்ச ஊதியத்தினைக் கொண்டுள்ளது. இச்சட்டம் தொழில்தருனர்கள் ஊழியர்களுக்கு இந்தத் தொகைக்குக் குறைவான தொகையினை ஊதியமாக வழங்குவதைத் தடைசெய்கின்றது. 2024 செப்டெம்பரில் (தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு) 2024 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்திற்கு (திருத்தம்) அமைவாக இத்தொகை மாதமொன்றுக்கு 17500 ரூபா எனும் குறைந்த தொகையாகவே காணப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டு 27000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்தச் சட்டங்கள் அரச மற்றும் தனியார் துறைத் தொழிலாளர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும் என்பதுடன் வீட்டு வேலையாட்கள் உள்ளிட்ட முறைசாராத் தொழிலாளர்களுக்கு அமலாக்கத்தக்கதல்ல. எமது ஆய்வில் குறிப்பாக வீட்டு வேலைக்கான பரந்த வீச்சிலான நாளாந்த ஊதியத் தொகைகளை நாம் பார்த்தோம். இது 1000 ரூபா முதல் 2000 ரூபா வரை பரவிக் காணப்பட்டது. வீட்டு வேலையாட்கள் பிரசவ விடுப்பு அல்லது சுகவீன விடுப்பு, கொடுப்பனவுடனான விடுப்பு, ஓய்வூதிய நலன்கள் போன்ற தொழில் பாதுகாப்பு அற்றவர்களாக உள்ளனர் – இவர்களின் நாளாந்த அல்லது மாதாந்த வருமானம் முற்றுமுழுவதும் நாளாந்தம் வேலைக்கு வரக்கூடியதாக இருப்பதிலேயே தங்கியுள்ளது. அதாவது, பெண்கள் குறிப்பாகப் பாதிப்புறுநிலையிலுள்ளவர்களாக உள்ளதுடன் வீட்டு வேலைக்கும் பராமரிப்புப் பணிகளுக்கும் இடையில் அல்லாடவேண்டியவர்களாக உள்ளனர்.

இந்தத் தொழிலாளர்களுக்கான நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகக்குறைந்த ஊதியத்தினை, கட்டாய கொடுப்பனவுடனான விடுப்பினை, பிரசவ நலன்களை, தொழில்தருனர் மற்றும் தொழிலாளருக்கு இடையிலான ஒப்பந்தத்தினை நிர்ணயிப்பதற்கான தொழில் சட்டகத்தினை வலுப்படுத்துவதை உள்ளடக்குகின்றது. ஒரு தசாப்தத்திற்கு மேலாக, இலங்கையில் வீட்டு வேலையாட்கள் சங்கம் வீட்டு வேலையாட்களுக்கான சட்டப் பாதுகாப்பினைக் கோரி வருகின்றது. ஊதியச் சபைக் கட்டளைச்சட்டத்தினுள்ளும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் அகியவற்றினுள்ளும் வீட்டு வேலையாட்களை உள்ளடக்குமாறும் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான மாற்றமாகத் தொழிலாளர்களை குறைந்தபட்ச ஊதியச் சட்டத்திலும் பணிக்கொடையிலும் சேர்க்குமாறும் இவர்கள்  ஆதரித்து வாதாடிவருகின்றனர். தேசிய சமூகப் பாதுகாப்பு உபாயமார்க்கம் சமூகப் பாதுகாப்புச் சபையினை வலுப்படுத்தி விரிவாக்குவதற்கான திட்டத்தினை உள்ளடக்குவதை நாம் அவதானிக்கின்றோம். இது சேர்த்துக்கொள்ளப்படுவதில் பின்பற்றப்படும் செயன்முறையினை எளிமைப்படுத்தி, வீட்டு வேலையாட்கள் உள்ளடங்கலாக அதிகளவான சுயதொழில்புரிபவர்களையும் முறைசாராத் துறைத் தொழிலாளர்களையும் கவர்வதற்கான தகைமைத் தெரிவடிப்படையினை விரிவாக்குதையும் உள்ளடக்குகின்றது. மேலும், பெரும்பாலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து தங்கி வாழும் வீட்டு வேலையாட்களாக இருப்பவர்களுக்கான மேலதிக பாதுகாப்பும் தேவைப்படுகின்றது – நாள் விடுப்புக்கான அவர்களின் உரிமை, நண்பர்களைப் பார்ப்பதற்காகத் தொழில்புரியும் இடத்தினை விட்டுச் செல்வதற்கான உரிமை, சமயத் தலங்களுக்குச் செல்வதற்கான உரிமை மற்றும் வீட்டில் மாத்திரமே முடங்கிக் கிடக்காதிருப்பதற்கான  உரிமை.

சமுதாயங்களுடனான எமது கலந்துரையாடல்களில் இவ்வாறான சட்டங்களின் அமலாக்கல்தன்மை மற்றும் தொழிலாளர்களுக்கும் தொழில்தருனர்களுக்கும் இடையிலான அதிகார இயங்கியல்கள் என்பன கோடிட்டுக்காட்டப்பட்டன. வீட்டு வேலையாட்களுக்கு மேலதிக நலன்களை வழங்கவேண்டியிருந்து செலவு அதிகரித்தால் வீட்டு வேலையாட்களை வேலைக்கு அமர்த்தும் நாட்களின் எண்ணிக்கையினைத் தொழில்தருனர்கள் குறைக்கலாம் என்கின்ற கரிசணை காணப்பட்டது. இந்தச் சட்டங்களுக்கு அல்லது கொள்கைகளுக்கு இயைபுறாத தொழில்தருனர்களை, தமது தொழில்களுக்கு அபாயநேர்வு ஏற்படாமல், வீட்டு வேலையாட்கள் எவ்வாறு கையாளலாம் என்பது பற்றிய கரிசணைகளையும் அவர்கள் எழுப்பினர்.

வீட்டு வேலையாட்களுக்காக இவ்வாறான சட்டங்களுக்காக ஆதரித்துவாதாடி அவற்றினை வலுப்படுத்துவதுடன் சேர்த்து, வீட்டு வேலையாட்கள் (வீடுகளுக்கும் வியாபாரங்களுக்கும் சேவைகளை வழங்குகின்ற வேறு எவ்விதமான ஏனைய முறைசாராத் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக) முறைசார் துறையிலுள்ளவர்கள் கொண்டுள்ளதைப் போன்ற அதே உரிமைகளையும் பாதுகாப்பினையும் கொண்டவர்களாகக் கருதப்படும் எண்ணக்கருவினைச் சாதாரணமாக்குவதற்காக கௌரவமான வேலை மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமான ஊதியம் தொடர்பாகச் சமாந்தரமான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான தேவையினையும் நாம் பரிந்துரைக்கின்றோம். இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பராமரிப்புப் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு வழங்கும் ஒரு பாரிய குழுமம் அவர்களின் வாழ்க்கை முழுவதும் வேலை செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதும் (அவர்களின் வேலைகள் அவர்களின் தொழில்தருனர்கள் ஊழியப் படையின் அங்கமாக இருப்பதை இயலுமாக்குகின்றது) "ஓய்வுபெறும் வயதில்" எந்தவிதமான சேமிப்பும் அற்றவர்களாக இருந்து எவ்விதமான ஓய்வூதிய நலன்களும் அற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதும் மிக மிக அநியாயமான பொருளாதார மாதிரியாகும்.

## பரிந்துரை 3: அனைவருக்குமான பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள்

நேர்காணப்பட்ட 45 பேரில் 19 பேர் தங்களின் பிள்ளைகளில் குறைந்தது ஒரு பிள்ளை அதன் பாடசாலையில் ஒருவேளை இலவச உணவினைப் பெறுவதாகக் குறிப்பிட்டனர். இந்தப் பிள்ளைகள் இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ள முன்பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர் அல்லது ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனெனில், இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் 5 ஆம் வகுப்புக்கும் அதற்குக் கீழுள்ள வகுப்புக்களுக்குமே வரையறுக்கப்பட்டுள்ளன. இலவச உணவு வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டுள்ள முன்பள்ளிகளுக்குத் தங்களின் பிள்ளைகளை அனுப்பியதாகக் குறிப்பிட்ட நேர்காணல் செய்யப்பட்டவர்கள், தாங்கள் பிள்ளையினை முன்பள்ளியில் சேர்ப்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்று இதுவாகும் எனக் குறிப்பிட்டனர். குறிப்பாக, பெற்றோர்கள் என்ற ரீதியில் இவர்களுக்கு மீன், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற போசாக்கான உள்ளீடுகள் உள்ள உணவுகளை அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் வசதியில்லாமல் இருக்கின்றது. உதாரணமாக, வைஷ்ணவி அசுவெசும பெறும் ஒரு பயனாளி. இவர் தேயிலை பொதிசெய்யும் தொழிற்சாலையில் வேலை செய்கின்றார். பொதுவாக இவர் 25 மணித்தியாலங்கள் கொண்ட முறைமாற்றுப் பணியினை மேற்கொள்கின்றார். எவ்வாறாயினும், இவரின் சிறு பிள்ளைகள் இருவரும் இலவச உணவினைப் பெற்றுக்கொள்கின்றனர். இது இவர்களின் நிதி நிலைமையில் பெரிய ஒரு வித்தியாசத்தினை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், இவர்கள் எதிர்வுகூற முடியாத முறைமாற்று மணித்தியாலங்களில் வேலை செய்கின்றனர். இவர்களின் பிள்ளைகள் அதிகளவு சோயாவும் பருப்புமே உட்கொள்கின்றனர். இவர்கள் அரிதாகவே வீட்டில் மரக்கறிகளை உட்கொள்கின்றனர். பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்களில் வழங்கப்படும் பழங்கள் மாத்திரமே இவர்கள் உண்ணும் பழமாக இருக்கின்றது.

பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் உழைக்கும் தாய்மார்களின் நேரத்தினையும் சேமித்துள்ளது. ஒரு தாய் குறிப்பிடுகையில், தனது மகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு முன் தனக்குச் சமைக்கவேண்டிய தேவையில்லாத காரணத்தால் தன்னால் காலை 6.30 மணிக்கு எழுந்திருக்க முடியும் என்று கூறினார். மேலும், பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளுக்கு உணவினை அனுப்புகையில் பின்பற்றவேண்டிய உணவு வகைகளின் பட்டியலைப் பொதுவாகப் பாடசாலைகள் நிர்ணயிக்கின்றன என எமது ஆய்வுகள் காட்டியுள்ளன. இது பொதுவாக அதிக நேரத்தினை எடுப்பதாகவும் தயாரிப்பதற்கு அதிக செலவினை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது (கொழும்பு ஏர்பன் லெப், 2023). இந்த உணவு வகைப் பட்டியலைப் பின்பற்ற முடியாத போது, கண்டிக்கப்படலாம் என்ற அச்சத்தில் அல்லது வெட்கத்தின் காரணமாகச் சில பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என முன்னைய ஆய்வு காட்டியுள்ளது. பல உழைக்கும் தாய்மார்கள் முழு நேரம் வேலை செய்கின்ற காரணத்தினால் அவர்களின் பெரிய பிள்ளைகளுக்கு உணவுச் சாலையில் இருந்து எதையாவது வாங்கி உண்ணுமாறு பணம் கொடுக்கின்றர். தாய்மார்கள் அவர்களின் முழு நாள் வேலைக்கு முன்னதாக உணவு சமைப்பதற்காக அதிகாலை 4 மணிக்கு எழுந்திருப்பதைச் சாதாரணமானதாக ஆக்காமல் பிள்ளைகள் ஆரோக்கியமான உணவினை உண்பதையும் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன.

முன்பள்ளியில் வழங்கப்படும் இலவச உணவுக்கு கொழும்பு மாநகர சபை உதவி வழங்கி ஒவ்வொரு பிள்ளைக்கும் 100 ரூபா கொடுப்பனவினை வழங்குகின்றது. அயலிலுள்ள உணவு விநியோகக் கடையில் இருந்து வாரமொன்றுக்கு ஐந்து வித்தியாசமான உணவுகள் பெறப்பட்டு அவற்றில் கொண்டைக்கடலையுடன் முட்டை மற்றும் கரட், நூடுல்சுடன் முட்டை மற்றும் கரட், சோற்றுடன் கீரை, நெத்தலி மற்றும் பருப்பு என்பன வழங்கப்படுகின்றன. இந்த உணவினைப் பெறும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஆவணப்படுத்தப்பட்டு உணவின் புகைப்படமும் உணவு உண்ணும் பிள்ளைகளின் புகைப்படமும் எடுக்கப்பட்டு கொழும்பு மாநகரச சபைக்கு அனுப்பப்பட வேண்டும். உணவு நிகழ்ச்சித்திட்டம் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்த மாநகர சபை அதிகாரிகள் பாடசாலைக்கு விஜயம் செய்கின்றனர். சில மாணவர்கள் முன்பள்ளிக்கு வருவதற்கான பிரதான காரணம் இது எனவும் தமது தாய்மார்களுக்கு பின்பு உணவினை வழங்குவதற்காகச் சில பிள்ளைகள் உணவினை மறைக்கக்கூடச் செய்கின்றனர் எனவும் முன்பள்ளி ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

வளரிளம் பருவப் பிள்ளைகளே தொடர்ச்சியாகப் பசியோடு இருக்கின்றனர் என்பதையும் அவர்களுக்கு அதிக கலோரியும் போசணையும் தேவைப்படுகின்றன என்பதையும் குறிப்பிட்ட பதிற்செயற்பாட்டாளர்கள் பலர், இலவச உணவு நிகழ்ச்சித்திட்டம் பெரிய வகுப்புக்களுக்கும் விரிவாக்கப்படல் வேண்டும் என ஆலோசனை தெரிவித்தனர்.

பொதுவாக நுண்போசணைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கும் வளரிளம் பருவப் பெண் பிள்ளைகளுக்கும் இந்தக் கூற்று உண்மையானதாகவே காணப்பட்டது.

பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் தாய்மார்களுக்கு ஒரு நிலையான வருமானத்தினை உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பாகவும் காணப்படுகின்றது. இது பிள்ளைப் பராமரிப்புக்கு ஒத்திசைவாக ஒரு நிலையான வருமானப் பிறப்பாக்க மூலமாகக் காணப்படுகின்றது. வீட்டினை அடிப்படையாகக் கொண்ட உணவு விநியோக வியாபாரம் சந்தையில் மலிந்து காணப்படும் நிலையில் அதன் வரையறுக்கப்பட்ட இலாபமீட்டும் தன்மை என்ற சூழமைவில் இது அந்த வியாபாரத்தினைத் தரமுயர்த்துவதற்கான ஒரு வாய்ப்பினையும் வழங்குகின்றது.

பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உணவு வழங்குபவர்கள் கேள்வி கோரல் செயன்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு ஒரு வருடத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திப்படுகின்றது. அனோமா இந்தச் செயன்முறை பற்றி வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் அவரின் நண்பர் ஒருவர் மூலம் அறிந்துகொண்டு கேள்வி கோரல் செயன்முறையினைப் பூர்த்திசெய்து இரண்டு பாடசாலைகளுக்கான இரண்டு ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்டார். இந்த வியாபாரத்தினை அவர் தனது சகோதரியுடனும் மற்றொரு அயலவருடனும் சேர்ந்து நடத்துகின்றார். இவர்களுக்கு ஒரு உணவுப் பொதிக்காக 110 ரூபா வழங்கப்படுகின்றது. இது மாதாந்தம் 2 லட்சம் முதல் 3 லட்சம் வரையான தொகையாக அமைகின்றது. புரதத்திற்கென இவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உணவுத் தெரிவு வழங்கப்படுகின்றது ஆனால் பழங்களையும் மரக்கறிகளையும் தெரிவுசெய்வதற்கான சுதந்திரம் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு சராசரி உணவுத் தெரிவுப் பட்டியலில் பின்வருவன உள்ளடங்குகின்றன: சோறு, பருப்பு, ஒரு மரக்கறி, கீரை, மற்றும் ஒரு பழத் துண்டு. புத்தம் புதிய உற்பத்திகளதும் சமையல் எரிவாயுவினதும் போக்குவரத்தினதும் செலவுகள் கூடிக் குறைவதால் உணவொன்றுக்கு 110 ரூபாவினைக் கொண்டு இந்தத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வது கடினமானதாகும். ஆனால், பல தடவைகள் முயற்சித்துப் பிழைகள் விட்டு இப்போது மாதாந்தம் சுமார் 50000 ரூபாவினை அனோமாவினால் இலாபமாகப் பெற முடிகின்றது. பரிமாறப்படும் ஒவ்வொரு உணவினதும் புகைப்படத்தினை இவர்கள் வட்ஸ்அப் குழுவின் மூலம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புகின்றனர். அத்துடன், ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபருக்கும் உபஅதிபருக்கும் பிரிவுத் தலைவருக்கும் தரக் கட்டுப்பாட்டுக்காக வாராந்தம் உணவு அனுப்பிவைக்கப்படுகின்றது.

பாடசாலை நாளின் போது பிள்ளைகளுக்கு நியாயமாகவும் விரைவாகவும் பரிமாறுபவர்கள் உணவினைப் பரிமாறவேண்டும் என்பதையும் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம் தேவைப்படுத்துகின்றது பரிமாறுபவர்களாக இருவர் நியமிக்கப்பட்டு நாளொன்றுக்கு இவர்களுக்கு 300 முதல் 500 ரூபா வரை வழங்கப்படுகின்றது. குறிப்பாக, இது பிள்ளைப்பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு உகந்ததாக இருப்பதால் இவர்கள் இந்த வேலையினை ஏற்றுக்கொண்டனர். சமிலா பின்வருமாறு குறிப்பிடுகின்றார், “நான் அதிகாலையில் வேலைக்குப் போய் நண்பகல் வீட்டுக்கு வருகின்றேன். இதனால் எனது பிள்ளைகளை என்னால் அழைத்துக்கொண்டு அவர்களைத் தனியார் வகுப்புக்குக் கூட்டிச் செல்ல முடிகின்றது. இல்லாவிட்டால், வேறு யாரையாவதுதான் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு நான் ஏற்பாடு செய்யவேண்டி இருந்திருக்கும். ஏனெனில், நானும் எனது கணவரும் வேலைக்குச் சென்றிருப்போம். இதனால்தான் நாளொன்றுக்கு 300 ரூபா போன்ற சிறிய தொகைக்குக் கூட நான் வேலைக்குச் செல்கின்றேன். இவ்வறான சிறிய தொகைக்கு யாரும் வேலைக்குச் செல்ல மாட்டார்கள்.” உணவினைப் பரிமாறுவது நாளொன்றுக்குச் சில மணித்தியாலங்களே என்பதால், உறவினர் ஒருவரின் வீட்டில் இனிப்புப் பண்டங்களைத் தயாரிப்பது, அல்லது அங்குமிங்கும் துப்பரவு செய்யும் வேலைகளைச் செய்வது போன்ற ஏனைய பகுதிநேர வேலைகளை ஆமினாவினால் செய்யக்கூடியதாக இருக்கின்றது. பதிலளித்த இருவருமே தங்களின் வேலை பிள்ளைகளின் பாடசாலை விடுமுறை நாட்களுடன் பொருந்தி வந்ததாகக் குறிப்பிட்டனர். எனவே, நேரம் இல்லாத காரணத்தினால் ஏனைய வகையிலான தொழில்களில் ஈடுபட முடியாத ஆனால் திறன் படைத்த தாய்மார்களுக்குப் பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒரு வருமான மூலத்தினை வழங்குகின்றன. பாடசாலைச் சூழல் உள்ளார்ந்த ரீதியில் மரியாதை எனும் பண்புடன் தொடர்புற்றுள்ளது. எனவே, இவ்வகையான வேலைகள் பாரம்பரியமான மற்றும் இறுக்கமான பால்நிலை நியமங்களைக் கொண்டுள்ள சமுதாயங்களுக்கும் சூழமைவுக்கும் மிகப் பொருத்தமானதாக இருக்க முடியும்.

**Centre for a Smart Future** is an interdisciplinary public policy think tank based in Colombo, Sri Lanka with researchers, advisors, practitioners and partners around the world.

Our partners include Blue Resources Trust, London School of Economics, Biodiversity Sri Lanka, Environment Foundation Ltd, Good Life X, Institute of Development Studies U.K, SEVANATHA Urban Resource Center.

The urbanisation and cities theme at CSF is led by Colombo Urban Lab (CUL). **CUL** works towards equitable and sustainable cities in Sri Lanka by advocating for research driven policy making where the lived experiences of citizens form the basis of a city's development. It is a collaborative and interdisciplinary space, enabling connections between research, practice and public policy. Our research and advocacy themes include infrastructure, food environment, climate change, social security and public space.

@colombourbanlab
csf-asia.org/colombo-urban-lab